நன்றியின் நாடகம்

C-,892 MKY,N
N07
76677

உ

கடவுட்டுணை

நளாயினிசரித்திரமென

நளாயினி நா

இஃது,

சாலை கிருஷ்ணப்பநாயக

இயற்றப்பட்

ஸ்ரீ நைனாங்குட்

முனிசாமி முதலிய

சுவாதந்தரத்துடன்பெற்றுக்

ரிஜிஸ்டர் செய்து

சென்னை ஸ்ரீ

தனலக்ஷ்மி கிருஷ்ணா அச்சியந்

பதிப்பிக்கப்பட்ட

ரிஜிஸ்டர் காபிரைட்

1907.

இதன் விலை)

76677

0-1892MKY,N
N07

உ

கடவுள் துணை.

நளாங்கினி மாவ்ஸயீடு என்னும்

நளாயினி நாடகம்.

97

1-08

விநாயகர் துதி விருத்தம்.

பொன்னுலகத்தனையாளும் புரந்தரன்மிகத்துதிக்கும்
நன்னிலந்தன்னிலந்த நளாங்கினிசரித்திரத்தை
பன்னிநாடகமாய்பாட பார்வதிபுத்திரன்தான்
கன்னிவல்லபைக்கணவன் கணபதிகாப்புதானே.

சரஸ்வதி துதி விருத்தம்.

கற்பினிலதிகவஞ்சி கமலநான்முகனூர்தேவி
அற்புதஅறிவில்மிக்க ஆனந்தமானரூபி
நற்கயர்கன்னிபற்றி நளாயினிகதைக்கினிவிர்
சொற்பொருள்தருங்கிழத்தி சிலம்பணிபாதம்போற்றி.

சுப்பிரமணியர் துதி விருத்தம்.

திருவினுக்கொப்பாநங்கை ஜெகமெலாம்துதிக்குஞ்செல்வி
கருமலர்முடிக்குமங்கை நளாயினிசரித்திரத்தை
அறிஞருக்களவுதோன்று மதையுநாடகமாய்ப்பாட
கருணாமருகன்கந்தன் கமலபொற்பாதம்போற்றி.

மகாவிஷ்ணு துதி விருத்தம்.

கடலுலகில்பெண்ஜெனனக் காதலர்கள்
கருத்தைநன்றாய் விளங்கவைத்த
வடிவுள்ளோர் மின்னோநகர்மாதுநளா
யினிக்கதையை வழுத்திபாட
அடிமூன்றாய்யளந்தாரன் ஆலிலையாழித்
திட்டெனையாள் கொண்டபெம்மான்
படிமிசையிலோனியின்கண் ணுறங்கிடாக்
கனகாங்கன் பாதம்போற்றி

பரமசிவன்துதி விருத்தம்.

நாற்றிசையும்புகழ்படைத்த நளாயினியாள்
சரிதையெந்தன் நாவிற்சாற்ற
கோத்தமலர்கொன்றைமுடி குடிநதி
மதியணிவோன் குருபரய்வந்து
யெத்தபடிமுத்திதர வெனையபிரு
பதஞ்சேர வென்றும்பான்மை
பார்த்தபரஞ்சானேயொரு காண்மாவோர்
பிறப்பிலகும் பண்புதானே.

சத்திதுதி விருத்தம்.

அகிலமுமாயண்டமுதலினத்துயிருளகலைதயன்றோயாகி
சகலமுமாயென்னருவுக்கெட்டாத ஆலந்தன்மையாகி
பகலிரவாய்நீங்காதமனைவாழ்க்கை யகலவிந்தப்பதத்தோர்க்கும்
விருதமிருபாஞ்சோதிசத்திபதமலர்தினமுமிறைஞ்சுவோமே.

கட்டளைக் கலிப்பா.

திருவுங்கல்வியுஞ் சீருஞ்செழுத்திடும்
தென்னைவாழைகமுகு வளர்ந்திடும்
மருவுமாமலர் வண்டினம்பாடிடும்
மாடமாளிகை சாலைநகர்தனில்
பெருகிவாழும் வரதர்க்குதெண்டனும்
பேசும்போசக்குலத்தில் வந்தோனெனும்
அருமைமாங்கனளித்த சிரேஷ்ட்டனும்
அன்பன்கப்பருய ஞானக்கிலாயம்பின்
வருடம்பன்ரெண்டில் வந்தவதாரனும்
மன்னுருநாவில்வளர் வாணிசெப்பினுள்
சிறுகுதலைமொழியப்பெரியவர் சேர்த்தால்கொள்ளுஞ்
சொலதுபான்மையாய்
கருடனைக்கண்டு சிட்டுபாந்தார்ப்போல்
கல்வியுள்ளதோர் வாணர்சொற்கேட்டுமே
யிருளிலத்தெளதாசை புன்சொல்லிலைத
பிழைபொருத்திதர்ப்பர் பெரியோர்களே.

விநாயகர் வருகிற விருத்தம்.

திருவளருஞ்சாலைநகர் விளங்கமேவும்
சென்னிதனில் நவரத்னமுடி துலங்க
மருவுதிருபுஜகீர்த்திசோதிமின்ன
மாபரணம் ருத்ராக்ஷமாலைபூண்டு
பெருவயறும்வல்லபையை யிடத்திலவைத்து
பெருச்சாளிமீதேரி யிக்கதைக்கு
கருதிரமாயானைமுகத் தைங்கரத்தோன்
கணபதியுஞ்சபைதனிலே வருகின்றாரே.



விநாயகர் வருகிற தரு.

தந்திமுகத்தைங்கரர்வந்தார் சபைதனிலே
தந்திமுகத்தைங்கரர்வந்தார்.

தந்திமுகந்துலங்க தொந்திவயருலங்க
தொந்தோம்தொந்தோமென்று விந்தைநடஞ்செய்து தந்திமு
கையிற்கனியுங்கொண்டு காலிற்சதங்கைபூண்டு
மெய்யில்முப்புரிநூலும் விளங்கசபையோர்காண தந்திமு
திருமால்மருகனும் சிவகாமிநந்தனா
மருமாமலரணியும் வல்லபைக்கணவனான தந்திமு
நாட்டில்நளாயனிக்கதை கேட்டோர்கள்முத்திபெற
யேட்டிலதைதிருத்திட நீட்டுமெழுத்தாணிகொண்டு தந்திமு

வசனம்.

இந்தப்பிரகாரமாக விக்கினேஸ்வரர் தெரிசனந்தந்த பின்புமகா சிறப்புற்றோங்கிய நிடததேச விஸ்தாரமானகரம் அரசுசெய்யும் நளமகாராஜன் ஆசாரவாசல்கார்க்கும்கட்டியக்காரன்வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன் வருகிற விருத்தம்.

நிடதநாடாளுகின்ற நிருபனுக்கேவல்செய்யும்
குடைநிழல்வாசல்கார்க்கும் குவலயம்துதித்தாமிக்க
படைமுகத்திலேயாவீரன் பராக்கிரமமுடையோனான
விடையவனுடையகட்டியன் விருதுடன்வருகின்றானே.

கட்டியக்காரன் வருகிற தரு.

கட்டியக்காரனும்வந்தானே   வெருவிதரணைமுளகெட்டி
கட்டியக்காரனும் வந்தானே.
கட்டியக்காரனும்வந்தான்   விஷ்டமுடன்வாசல்கார்க்க
துஷ்டரைசங்கரித்திடும்   பட்டயம்கட்டாரிகொண்டு. (கட்)

சிரசிற்பாகைஇலங்க   செந்தோடுகுச்சியிலங்க
அரசன்கொலுமண்டபம்   அலங்கிர்தமேசெய்ய. (கட்)

சதுரங்கசேனைகளும்   தளபதிவீரர்களும்
அதிககாருபாரிகள்   அரசரெச்சரிக்கையென்று. (கட்)

வசனம்.

இந்தப்பிரகாரம் நிடததேசம் செங்கோல் செலுத்தி மநுநீதியுடனே அரசுசெய்யும் நளமகாராஜன் கொலுவுக்குவருகிறார் அவரவாள் யெச்சரிக்கை சபையோர்களே.

நளமகாராஜன் வருகிற விருத்தம்.

நாரணர்பாதந்தன்னை நாவினிற்றுதித்துப்போற்றி
பாரினில்நிடதநாடு பாங்குடனரசுசெய்யும்
வீரனும்களராஜேந்திரன் தினகரனொளியைப்போல
மாரனுமிவனென்றெண்ண மகாராஜரும்வருகின்றாரே.

நளமகாராஜன் வருகிற தரு.

வேந்தர்வேந்தர்க்கதியாம்   விந்தைபுரியாளுமன்னன்
பாந்தமுடன்நளராஜன்   பாங்குடன்வந்துகொலுவானார். (வே)

அந்தமானநிடதநாடு   காசநானநளராஜன்
சிந்தைகளித்துசபையிற்   சீருடன்கொலுவானார். (வே)

திங்கள்மும்மாரிபெய்ய   தேசதேசம்செழித்தோங்க
மங்களஞ்சேர்நளராஜன்   வரசவிதோகொலுவானார். (வே)

ஆலயங்களாருகாலம் அன்னம்னைவேத்யம்பூசை
சிலன்தப்பாநடத்தும்களங்கிரப்புடன்வந்துகொளுவானர். (வே)
வாரம்ஆரிலொன்றுகொண்டே வாழுங்குடிக்கைக்குமூண்டு
கார்க்குமகாநளராஜன் கடிகிமேவிகொளுவானர். (வே)

நளன் சொல் விருத்தம்.

மந்திரிகேளாயிந்த மானகர்நிடதநாட்டில்
அந்தமாஆலயங்கள் ஆருகால்வேளைபூசை
பந்தமாய்நடக்குதோதான் பாரினில்அரம்விளங்க
விந்தைநல்மாரிபெய்து விசேஷமோகுடிகள்சொல்வாய்.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே நம்நிடதேசத்தில் சிவாலயம் விஷ்ணுவாலயம் மற்ற தேவாலயங்களும் ஆருகாலப் பூசைநடந்துவருகிறதா மாதமும்மாரி பேய்ந்து தேசம் செழித்து குடிகளனைவோரும் க்ஷேமந்தானசொல்வீர்கள் மந்திரிமார்களே.

மந்திரிமார்கள் சொல் விருத்தம்.

அரசேயுந்தன்நாட்டில் ஆலயமாருகாலம்
முரசுவாத்தியமும்பூசை முயற்சியாய்நடப்பதல்லால்
குவிலாமாரிபேய்ந்து குடிகளும்சுபேக்ஷமையா
திருகொன்றுமில்லைசக்ர தீரனேசரணமையா.

வசனம்.

கேளுமையா மகாராஜனே நம்நிடதேசத்தில் மாதமும்மாரிபேய்ந்துகுடிகளும் சுபேக்ஷமையா திருகொன்றுமில்லைசக்ரதீரனே சரணமையா சரணம்

நளன் சொல் வசனம்.

ஆனல் மகாசந்தோஷமாச்சுது மந்திரிமார்களே.

நளன் சொல் விருத்தம்.

அருகினிலிருக்குமெந்தன் அமைச்சரேசொல்லக்கேளீர்
மருவுமென்மனையிருந்து வளர்ந்திடுக்குமாரத்தியான
கருமலர்குழலாளிப்போ நளாயினிஅம்மன்தன்னை
திருவளரென்சபைக்கு க்ஷணத்தினிலழைத்துவாரும்.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே அரண்மனையிலிருக்கும் யெனது குமாரத்தியான நளாயினி அம்மனை யிந்தசபைக்கு அழைப்பியுங்கள் மந்திரிமார்களே.

மந்திரிகள் சொல் வசனம்.

அப்படியே அழைப்பிக்குறோமையா சுவாமி.

நளாயினி சொல் விருத்தம்.

சந்தனபரிமளங்கள் சவ்வாதுபுனுகுபூசி
கொந்தலர்க்குழல்களசீவி கோங்குமல்லிகைமந்தாரை
விந்தைநற்சடைகள்பின்னி மெய்யெலாம்பணிகள்பூண்டு
சுந்திரநளாயிமாது சொகுசுடன்வருகின்றுளே.

நளாயினிவருகிற தரு.

கற்றவத்தானுதித்த அர்ப்புதமானமங்கை
நளாயினிமாதுவந்தாள் வெகுகற்பினில்பொற்பணி (கற்)

பிற்பணிபிவளெனும் கர்ப்பினிஆயர்ந்தவள்
பொற்பிரபைபிகரிவள் சர்ப்புத்ரியமூகிய-சுருள்
புண்ணியமோநளன் கண்மணியாய்வந்த
புத்திபிஆயர்ந்தவள் சத்தியமயிலவள் (கற்)

சொற்றவருதளன் பெற்றிடும்சுந்தரியாள்
சுத்தமுடனித்தமும் வெத்திதாதியர்சூழ-சுருள்
சுரதாதிதுதிசெய் மதன்வடிவமுகி
சோதனையாய்பிர்மன் சாதனையிதுவென (நற்ற)

அன்னநடைநடந்து சின்னயிடைதுவண்டு
தன்னிகரில்லாத மின்னலொளியைப்போல்-சுருள்
சங்கரியிங்கித பங்கயலோசனி
சரசகுணசனி விரதசம்பாஷணி (நற்ற)

தங்கப்பணிகள்பூண்டு சரிகைச்சேலையுடுத்தி
யிங்கிதசெங்கைவளைய யிருபாதசிலம்பசைக்கி-சுருள்
யெவ்வர்ணமங்கையர் அவ்விதநடையுடன்
திவ்வியகளப கஸ்தூரிகள்பூசியே. (நற்ற)

நளாயினிசொல் தரு.

வந்தனமையா வென்தந்தையே
வந்தனமையா வென்தந்தையே (வந்த)

வந்தனம்மிடசகா டந்தமராளுகின்ற
சுந்திராயிந்திரா சந்திராயுனதுபாதம் (வந்த)

ஒருதுரைதடம்புலி பசுவும்புனலருந்தும்
ஒத்துமெலியும்பூனை ஓரகத்தினில்வாழும்
கருவித்தவரைசக்கரம் கழுத்தருத்தாளரசே (வந்த)

மகுடமுடிக்குமேலே மயிர்க்காலில்வாள்தொங்கல்
மதிபிரட்டாகளுாயம் வகுத்தோர்க்குசிரம்போக
அரனெரிஅயன்திட்டம் அமைத்தபடித்தப்பாத (வந்த)

யில்லையென்போருமில்லை கள்ளரென்றபேருமில்லை
வள்ளலுனதுநாட்டில் வெள்ளமும்மாரிபெய்து
நல்வயல்நெல்விளையும் நகராளும்ராஜனே. (வந்த)

நளன் சொல் விருத்தம்

புத்ரியென்பாதம்தொட்டு போற்றிடும்தாயேநீயும்
சத்தியம்தவராபுருஷன் தன்னையேமணம்புரிந்தால்
அத்தனுர்செயலாலிந்த அவனியிற்கீர்த்தியோங்கி
நித்தமும்சுபங்கள்பெத்து நீடூழிவாழ்வாயம்மா.

வசனம்.

கேளுமம்மா யெனது புத்திரியான அம்மணி நீயோ சத்தியந்தப்பாத புருஷனை மாலைசூட்டி சுபாசுபங்கள்பெத்து நீடூழியாய் வாழக்கடவது அம்மணி.

நளாயினி சொல் விருத்தம்

தன்னிகரில்லாசக்ர வர்த்தியேதந்தையாரே
உன்னிதசபையிலென்னை உகந்துமேவரவேசெய்த
நன்னயச்சேதியென்ன னங்கையாலாவதென்ன
மின்னதென்றெனக்குமிப்போ யியம்புவீரரியத்தானே.

வசனம்.

கேளுமையா சக்ரவர்த்தியாகிய தந்தையே அடியேனை யிந்தசபையில் அழைத்தகாரியார்த்தம் யின்னதென்று தெரியப்படுத்தவேணும் சுவாமி.

நளன் சொல் விருந்தம்

காசினில்மாதர்க்கெல்லாம் கடவுளர்வகுத்தவாரு
ஆசையாயிளமைதன்னில் அன்னைதந்தயர்க்கடக்கம்
பாசம்யெவ்வர்ணகாலம் பத்தாவின்சொர்க்கடக்கம்
வாசமாமுதுமைதன்னில் மகவினுக்கடக்கம்தானே

வசனம்.

கேளுமம்மணி பூலோகத்தில் ஸ்ரீஜெனங்களுக்கு கடவுள் வகுப்புசெய்திருக்கிறது, மூன்றுகாலம்யிளமைப்பருவத்தில் தாய்தந்தைக்கடங்கிநடக்கவும் யெவ்வர்ணகாலத்தில் புருஷனுக்கடங்கிநடக்கவும் முதுமைகாலத்தில் புத்திரர்க்கடங்கி நடக்கவும் இந்தப்படிநடக்கவேணுமேயன்றி தன்மனதின்படி நடக்கக்கூடாது ஆகையால்நான்வரச்செய்தசேதிசொல்லுகிறேன் கேளுமம்மணி.

நளன்சொல் விருத்தம்.

இந்தநல்நீதியாலே யானுன்னைவரவேசெய்தேன்
பந்தமாப்பருவமாதல் பத்தாவுக்குன்னைதந்து
விந்தைநல்மணமுஞ்சூட்டி விதிமுறைப்படிநடக்க
அந்தமாமனதேதென்ன அரிவையும்சொல்லுவாற்றள்.

வசனம்.

கேளுமம்மா யித்த நீதிசாஸ்திரப்படி உன்னை ஒருவர்க்கு விவாகஞ்செய்து கொடுக்கவேணுமே. அதர்க்கு உன்மனதெப்படியென்று கேட்க நளாயினியம்மன் சொல்லுகிறவிதங் காண்க.

நளாயினி சொல் தரு.

தந்தையேசொல்லுமிந்நீதிமுறை சரியதுமெய்தானையா
விந்தையாய்ச்சொல்வதென்று விகடகுரோதங்களீவேண்டாமையா
காலப்பருவமதில் தந்தையர்தேடும்
கல்விப்பொரு ளாளனுகவே
அன்னைகருத்தென்னவென்றால் அருஞ்செல்வம்பொருள்தேடும்
பெண்ணின்மனதெப்படி மதன்போல்
பேரழகுடையவனாய் உலகில்வழக்கமையா
தந்தைமனதொத்தக்கணவன் விவேகியென்றால்
தாபக்குரவாகுல்பெண்கள்மனஸ் தாபக்குரவாகநேர்ந்திடுமே
ஆதலாலயன்வகுக்தபத்தா அவரெந்தன்கண்முன்னேதோன்றிடுவார்
பார்த்துநான்சொல்லுங்காலம் அவருக்கு
பரிந்தென்னைமணஞ் சூட்டிவையா

நளன் சொல், விருத்தம்.

அன்னமேசொல்லுஞ்ஞாயம் அரிவையேமெய்தானம்மா
சொன்னசொற்படியாகட்டும் தொல்சபையகன்றுஉந்தன்
உன்னிதமாளிகைக்கு உகந்துநீயேகவென்று
மன்னனும்விடைகொடுக்க மங்கையுமாளிசேர்ந்தாள்.

வசனம்.

கேளுமம்மா நீசொல்லுகிறஞாயமும் சரிதான் ஆகையாலுனது மனதின்படியே நடப்பிக்குறேன். நீர் அரண்மனைபோய் சேரென்று உத்தரவுசெய்ய நளாயினி அம்மனும் அரண்மனையேபோய் சேர்ந்திருக்க சிலநாள் சென்றபின்பு மகாதபசிரேஷ்டராகிய மௌகல் மகாரிஷியானவர் நளமகாராஜன் சபைக்கு வருகிர விதங்காண்க.

மௌகல்யர் வருகிற விருத்தம்.

தபந்தினில்மிகுத்த சடைமுடி துலங்க
தண்டுடன்கமண்டல தாரி
ஜெபத்தினில்மிகுத்த மாலிகாபரணஞ்
சிகையுடன் மெய்யினிலணிந்து

விபத்தினில்மிகுத்த ஞானமெய்விளங்கி
விபூதிதூளிதமுட னெழுந்து
சுபத்துடன்நளன்முன் மௌகல்யமுனிவர்
தோன்றினர் சபையினிற்றனே.

மௌகல்யர் வருகிர தரு.

மதுக்குலப்பிரகாசன்? ஜெகத்திலுள்ளோர் துதிக்கும்
மௌகல்யர்முனிவந்தனரே வெகுதபத்தினில்மிகுத்தவர் (மௌ)

அகத்தாசைசுகத்தாசை ஜெகத்தாசையைவெறுத்து
மிகத்தாசைதபத்தாசைவருத்தாசைமேல்விளங்கும்-சுருள்
வல்லவர்கல்வியில் சொல்லுவருலகினில்
வெல்லுவர்மதனையே நல்லவரிவரெனும் (மௌ)

கையிற்கமண்டலமும் காலிற்பாதக்குரடும்
மெய்யில்வெண்ணீரணிந்து மிருசெவிக்குண்டலமும்-சுருள்
விண்ணுளோர் மண்ணுளோர்
ரெண்ணுளோ ரெவர்களும்
பண்ணுவரிவரெனு கண்ணெனிசேர்ந்திட (மௌ)
மேவுஞ்சடைமுடியும் காவிகாம்பரத்துடன்
தாவிமுன்னாளுந்தன் சங்கரிவரென்ன-சுருள்

சதுர்விதசித்தியும் மதிவிதசத்தியும்
சகிபெருமுத்தியும் விதிபொயத்தியும் (மௌ)
சரிகைகிரிகையோகந் தாண்டிமெஞ்ஞானகிரி
அரிவைப்பெருக்கிமனம் அன்பைக்குரிக்கியின்பம்சுருள்
அத்தனேசுத்தனே சித்தனேகர்த்தனே
வித்தனேஅடியேனை முத்திக்குளாக்கென (மௌ)

மௌகல்யரிஷிசொல் விருத்தம்.

வித்தகசீஷாகேளாய்விதர்ப்பைமாநகரில்வந்தோம்
மெத்தவும்யிந்தநாடு விநோதமாயிருக்குதப்பா
நத்தியின்றுட்டையாளும் நளமகாராஜன்பக்கல்
பத்தியாய்வந்தோமென்று பகருவீர்பகருவீரே.

வசனம்.

கேளுங்களப்பா சீஷர்களே இந்த விதர்ப்பாபுரிபட்டணம் வந்தோம் இதுவோ மகாவிநோதமாக இருக்கின்றது ஆளவிந்தபட்டணத்தையாளப்பட்ட நளமகாராஜனுக்கு நாமிவ்விடம்வந்திருக்கிறோமென்று சேதிசொல்லி வாரும்பிள்ளாய் சீஷர்களே.

சீஷர்சொல் வசனம்.

ஆனால் அப்படியே சொல்லி வருகிறேனையாசுவாமி.

சீஷர்சொல் விருத்தம்.

மன்னவாநளனேயிந்த மாநகருந்தன்வாசல்
தன்னிகரில்லாமௌகல்ய தர்ப்பார்வந்தாரிப்போ
நன்னிலத்தரசன்கேட்டு நடுங்கியேயெழுந்திருந்து
பன்னியேமுடிவணங்கி பாதமேதொழுதிட்டானே.

வசனம்.

கேளுமையா நளமகாராஜனே உம்முடையகோட்டுவாசலில் மகாதபாக்கினியான மௌகல்யமகாரிஷி வந்திருக்கிறாரென்று சொன்னமாத்திரத்திலே நளமகாராஜன் நடுநடுங்கி யெழுந்திருந்து மௌகல்யமகாரிஷி பாதத்தில் சரணம்செய்கிறவிதங்காண்க.

நளமகாராஜன்சொல் தரு,

சரணமையனே முனிநாதா கருணைவையெனை
தூரணமாவினை யகலவே தருணமாகுதே
அருணைமானகர் தனில்வாரு... பரமநாதனே சரண

தந்தையாகினும் அடியேனுக்கு தாயுமானவா
விந்தையாகவே யிங்குவந்த சுந்தமூர்த்தியே சரண
ஆதிகாரணா புண்யசீலா வேதபாரணா
தேவகாருண்யா யெனையாளும் ஜீவகாரணா சரண
விண்ணுமாகினும் அனைத்துயிர் கண்ணுமாகினும்
மண்ணுமானவா யெனையாளும் அண்ணலாதவா சரண

மௌகல்யர்சொல் விருத்தம்.

மன்னனேவாழிவாழி மாநகர்வாழிவாழி
நின்னிடமனைவிமைந்தர் நீடூழிவாழிவாழி
நன்னிலமுந்தன்பக்கல் நாமுமேவந்தசேதி
கன்னியுன்மகளெனக்கு கல்யாணம்செய்திடாயே.

வசனம்.

கேளுமப்பா நளமகாராஜனே நீயும் உன்மனைவிமைந்தரும் யின்னகரமும் நீடூழியாகவாழக்கடவது ஆகிலும் நான் உன்னிடத்திற்குவந்த சேதிசொல்லுகிறேன் கேளும் உனனுடைய குமாரத்தியாகிய நளாயினியை யெனக்குப்பாணிக்கிரகணஞ்செய்து வைக்கவேண்டியதாகவந்தோம் அப்படியே செய்துவைக்க மனதுண்டாயில்லையா மகாராஜனே.

நளமகாராஜன் சொல் விருத்தம்.

மருந்துலமுனியேயெந்தன் மகளைநீர்விவாகம்செய்தால்
ஜெகத்தினிலெனைப்போலாரும் செய்தவமுடையோருண்டோ
திகைத்துநான்மொழியும்வார்த்தை பிசநியைதயவாய்கேளும்
அகத்தினில்வளரென்புத்ரி அரிவையையொப்பச்செய்வீர்.

வசனம்.

கேளுமையா முனிநாதா தாங்கள் யென்குமாரத்தியை விவாகம்செய்தால் பூலோகத்திலே யென்னைப்போல் தபசுசெய்தவர்கள் ஆருமில்லை ஆகிலும் யிக்கருத்துக்குவேருயோசனை ஒன்றிருக்கின்றது அதை தயவுசெய்து கேட்க்கவேணும் அதுயென்னவென்றால் அரண்மனையிலிருக்கும் யெனது குமாரத்தியை மனது ஒப்பும்படி செய்வீராகில் அந்தப்படியே நடப்பித்து வைக்குரேனையா சுவாமி.

மௌகல்யரிஷி சொல்தரு.

அடுக்குமோவுலகினில் அருவைவைக்கேட்பது
அய்யய்யோசதிமோசம் மன்னனே.

நளராஜன் சொல் தரு.

மோசமல்லவேயிது மொழியுமென்மகள்வார்த்தை
மெய்தான்மெய்தானையா முனிநாதா.

மௌகல்யரிஷிசொல் தரு.

மெய்யானாலுன்மகள் ஒப்புவாளோசொல்லும்
முனியெனைக்கண்டாலே மன்னனே.

நளராஜன் சொல் தரு.

கண்டாலமைப்பிருந்தால் கருத்துமேலுண்டாகும்
காலபலமரியேன் முனிநாதா.

மௌகல்ய ரிஷி சொல் தரு.

கண்டென்னையொப்பினால் சமுரும்வார்த்தையுனக்கு
காதிலெப்படிகேட்க்கு மன்னனே.

நளராஜன் சொல் தரு.

ஒப்பும்வார்த்தையரிய உயர்ந்தகணையாழியை
ஒருமையாய்வாங்கிவாரும் முனிநாதா.

மௌகல்ய ரிஷி சொல் தரு.

வாங்கினான்வந்துன்கையில் வைத்தால்சம்மதியாமோ
வழக்குண்டோசொல்லுவாய் மன்னனே.

நளராஜன் சொல் தரு.

வழக்கிடவல்லவனோ மருமம்சரியேயாகும்
மயங்கவேண்டாமையா முனிநாதா.

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

சம்மதியானால் சதிசெய்யேனென்று
சத்தியம்நீ செய்யவேண்டும்
அம்மதிபிரான அங்கையையுரைத்து
ஆகாசம் பூமியுமரிய

உம்மிடவுரிதி வார்த்தையுமொழிந்தால்
உகந்தானவ்விடம் போவேன்
நம்மிடஅன்புக் குரியபூபதியே
நளமகாராஜனே தெரிவாய்.

வசனம்.

கேளும் மகாராஜனே அந்தப்பிரகாரம் ஒப்பினால் சதிசெய்யமாட்டேனென்று கைபோடவேணும் அதின் பின்புதான் அவ்விடம் போவேன் மகாராஜனே.

நளராஜன் சொல் விருத்தம்.

வாணியும்பூமிதேவியுமரிய மதியுமச்சூரியனரிய
பாணியும்பிர்மன்பரமனுமரிய பத்தியவுரிதியுந்தவிரேன்
காணிசென்கையால்மருத்துவமுனியுன் கையரைந்திட்டேனினிப்போ
கோணிடாமனத்தாய்கொப்பனவேகும் குறைவிலாதபசிரேஷ்டரே.

வசனம்.

கேளுமையா முனிநாதா ஆகாயவாணி பூமிதேவி சூரிய சந்திரர் மும்மூர்த்திகள் தேவர்களும் மற்றயாவர்களும் அரியத்தக்கதாக உம்முடைய கரத்தில் யெனது கையைப்போட்டேன் யென் உருதிதப்பமாட்டேனையா சுவாமி.

மௌகல்ய ரிஷி சொல் தரு.

மன்னன்விடைகொடுக்க மருத்துவமௌகல்யர்
மதன்வடிவாகரூபங் கொண்டாரே
முன்னிருந்தமுனிரூபந்தன்னை விட்டுதருசாக
மோகங்கொள்ளுங்காம ரூபம்பூண்டாரே
அன்னநடைநளாயினி கன்னிமடந்தன்னைத்தேடி
அன்னல்மௌகல்யமுனி நடந்தாரே
சின்னமிதென்றெண்ணியல் மங்கைமாளியெங்கேயென்று
சிறுபிள்ளைதனைக்கேட்டு சென்றாரே.

நளாயினி சொல் கொச்சகம்.

தங்கப்பணிப்பூண்டு சரிகைபட்டுதானுடுத்தி
திங்கள்முகத்துங்களைப்போல் தெருவீதிவருவதைப்பார்
யெங்கள்குலதெய்வமம்மா யிவர்தானோயென்கணவன்
சங்கையென்ன அவரையிங்கே தான்வரவுஞ்செய்வாயே.

தோழிகள் சொல் சொர்ககம்.

காமமதனுகரும்புவில்லாய் பெண்களுக்கு
சிமோன்ரதிக்கேத்த திருவுருவைப்பார்த்தாலே
விமாவுன்னைப்போல் மேதினியிற்கண்டதில்லை
ஆமாமரசன்மகள் அழைத்துவரச்சொன்னாளே.

மௌகல்யரிஷி சொல் விருத்தம்.

ஆருனிபெண்ணேயானு அஞ்சாம்போகவேணும்
சேரமோயென்னையந்தி மலியுமழைத்ததென்ன
கூடும்நீஉனக்குயென்றூற் கோரிக்கையாவதென்றூர்
வீரனைபார்த்துஅந்த மெல்லியுங்கூருவாளே.

நளாயினி சொல் தரு.

யெந்தநாடெந்ததேசம் யிந்தப்பட்டணம்வந்த
தேதோகாரியமையா மன்மதனே

மௌகல்ய ரிஷி சொல் தரு.

முல்லைதேசம்கல்நாடு நல்லப்பட்டணமென்று
மோகமாயின்னகர்வந்தேன் ரதிதேவியே.

நளாங்கினி சொல் தரு.

சொல்லுமுந்தன் தந்தைதாயார் வள்ளலேநீரென்னஜாதி
சோதனையாயிங்குவந்த தேதையா.

மௌகல் ரிஷி சொல் தரு.

ஜாதியின்னஜாதியென்றும்தந்தைதாய்பேர்தெரியாது
தையலேத்தன்வரலாரு பொய்யல்லபெண்ணே.

நளாயினி சொல் தரு.

யெந்தன்கண்ணுக்கிசைந்த அந்தமுள்ளபுருஷரே
பென்னைநீர்விவாகம்செய்வீர் மன்னவரே.

மௌகல்ய ரிஷி சொல் தரு.

உந்தன்கண்ணுக்கிசைந்தால் ஒப்புவாரோபுலமில்
ஒருமையாவாரோதந்தை பெண்மயிலே.

நளாயனி சொல் தரு.

தந்தைதாய்மனதொப்ப சரிசெய்யநானல்லவோ
தயங்கநீர்வேண்டாமையா மன்னவரே.

மௌகல்யரிஷிசொல் தரு

ஒப்பினுனுன்கையில் மெய்ப்பான்மோதிரம்நீ
செப்பினப்படிதாராய் பெண்மயிலே

நளாயினிசொல் தரு

இத்தாரும்தந்தேன்கையில் யெந்தன்கணையாழியை
ஏருவீர்தந்தைபக்கல் மன்னவரே

மௌகல்ரிஷிசொல் தரு

ஆனல்நான்போய்வாரேன் அன்னமேயின்பிசகினுல்
அதர்க்குநானென்னசெய்வேன் பெண்மயிலே

நளாயினிசொல் தரு

தப்பொன்றும்வாராது தயங்கநீவேண்டாமையா
சந்திரசூரியர்சாக்ஷி மன்னவரே

மௌகல்லிய மகாரிஷிசொல் தரு.

அகப்பட்டுக்கொண்டாளே நளாயினி
சுகப்படச்செய்வேனே
வகைகெட்டபுலிபோனில் அகப்பட்டுக்கொண்டாப்போல்
மதப்பட்டயானைபடு குழிதட்டிவிழுந்தாப்போல் (அக)
பூனைவாயகப்பட்ட கிள்ளையைப்போலவும்
புலியின்வாயகப்பட்ட மானதுபோலவும்
பாம்பின்கையகப்பட்ட கதலியைப்போலவும்
அரிகையிலகப்பட்ட யிரணியன்போலவும். (அக)

மௌகல்யரிஷி சொல் விருத்தம்.

முனிபுமிந்தயெண்ணமுடன் பிரம்பேசென்று
முன்னிருந்தமதனருபம் தன்னைமாத்தி
பனிவெயிலிற்றிரிந்துழலும் முனிவேடத்தை
பத்தியவரெடுத்துஅந்த பாமனைப்போல்
மணியாடுமன்னனிட வாசல்செல்ல
மருத்துவரேவாருமென்று வணங்கராஜன்
கணையாழிமோதிரமுன் மகளெனக்கு
கலியாணம்செய்யிசைந்தாள் காணுமென்று.

3

வசனம்.

இந்தப்பிரகாரம் நளாயினி அம்மன் மோதிரம் கொடுக்கவாங்கிக்கொண்டு மௌகல்யர் சந்தோஷமடைந்து தன்னுடைய பெண்ணைக்கிரகேசிற்றென்று சொல்லிக்கொண்டு பிரயோபவந்து முன்னிருந்தமன்மத ரூபத்தைமாத்தி முனிவேடமெடுத்துக்கொண்டு நளராஜன் வாசலிற்சென்றார் அப்போது அரசனும்வணங்கக்கேளும்மகாராஜனே உனதுபுத்திரியென்னை விவாகம்செய்துக்கொள்ள யிசைந்துகணையாழியைக் கொடுத்தாள் யிந்தாரும் மகாராஜனே.

நளன் சொல் விருத்தம்.

சந்தோஷமாச்சுதையா தர்ப்பராடம்மைப்பார்த்து
வண்டணிகுழலாளெந்தன் மகளுமக்கிசைந்தாளென்று
கண்டுநீர்வாங்கிவந்த கணையாழிமெய்தானிப்போ
பெண்டிசையரியத்தானே இட்சணம்விவாகம்செய்வேன்.

வசனம்.

கேளுமையா சுவாமி யெனதுகுமாரத்தி உம்மைவிவாகம் செய்துக்கொள்ள யிசைந்ததாக நீர்வாங்கிவந்த கணையாழிமெய்தான் ஆகினும் யெனக்கு சந்தோஷமாச்சுது யிப்போதே நல்லசுபமுகூர்த்தம் பார்த்து விவாகம் செய்துவைக்குறேனையா முனிநாதா.

மௌகல்ய ரிஷி சொல் வசனம்.

ஆனால் மகாசந்தோஷமாச்சுது மகாராஜனே.

நளராஜன் சொல் விருத்தம்.

கன்மணியிவர்தானுந்தன் கணையாழிகையிற்தந்தார்
விண்டிராம்பேசலாமோ விரகுடன்விவாகஞ்செய்ய
நன்றுநான்ஞானியென்று நகர்க்கோலமெழுதவேணும்
சென்றுபோய்சேனையின்கு சீக்கிரம்வரச்செய்வேனே.

வசனம்.

கேளும்மம்மணியுனது கணையாழிமோதிரம் யெனதுகையில்கொடுத்தவரிவர்தான் ஆகையாலுனது இஷ்டப்படிநானே சுபதினமாகையால் முகூர்த்த ஓலையெழுதவேணுமம்மணி.

நளாயினிசொல் விருத்தம்.

தந்தையேயெந்தன்பக்கல் தனித்தவர்வந்தமன்னன்
யிந்தையிம்முனிவரல்ல விதியெந்தன்விதியையார்தான்
முந்தியேவிலக்கவல்லார் முடிவரன்செயலேயல்லால்
சிந்தைகூர்ந்தென்னையிந்த சிவக்கியானிக்களித்திட்டீரே

வசனம்.

கேளுமையா தந்தையே தனித்து எந்தன் கண்முன்னேவந்த மகாராஜனே இந்தமுனிவரல்ல ஆகிலுமிவர்தான் எனதுமோதிரத்தைகொண்டுவந்து கொடுத்தாரென்று தாங்கள்சொல்லுகிறபடியால் விதியையாரால் விலக்கப்படும் முடிவில் பரமசிவன்செயல்படி நடக்குமாகையால் சந்தோஷத்துடனே இந்தசிவக்கியானிக்கே பாணிக்கிரகணம்செய்துகொடுத்துவிடுமையா தந்தையே.

நளராஜன்சொல் தரு,

என்னசெய்வேனுந்த னெவ்வர்ணபருவத்துக் கிடக்க அப்பணி [தே
எண்ணிதானப்படியீசன் செயலல்லவெவருநும் மாத்தவொண்ணு

நளாயினிசொல் தரு

பெண்மதியால்போனகைகொண்டுநான் பின்புத்திபிதாவையா
பேதகம்செய்தாலேவேதனை தந்திடுமதுதான்மன்னனே

மௌகல்யரிஷி சொல்தரு

மகளீர்நீரும்ஒப்பேனென்றால் போரேன்வேருமிப்போ
மடிபிடித்துகன்னுவார்ப்பீர் அல்லவேயிதுபாரும்

நளராஜன்சொல் தரு

அய்யனேகோபம்நீர் செய்யவேண்டாமிந்தவேளை
அவனியிற்பெண்புத்தியல்லவோ யாரையுங்கேளும்

நளாயினிசொல் தரு

சுந்தரவதனம் பெந்தன்மேற்கிருபைசெய்வீரே
சூதென்றுவாதென்று யாதொன்றில்லையாளுவீரே

மௌகல்யரிஷிசொல் தரு

கணையாழிதந்ததும்பொய்யோ கட்டியதுவதுமெய்யோ
மணமேமனுட்காருற்போதையோ வாய்விட்டழுதாலேநொய்யோ

நளராஜன்சொல் தரு

பெண்ணின்மேல்கோபங்கள்செய்வது பெரியோர்க்குசிதமல்லவது
பெண்ணின்கருத்தைப்போல்முடிக்குறேன் யிஷ்டப்படிபோல்நடக்கு[றேன்

மௌகல்யரிஷிசொல் தரு.

ஆறுமுகமன்னனேரூதாயினு ஆகாத்யமாயிருவாதா [குறேன்
நாநானபடியினைதபொருக்கிறேன் நளனைக்கப்பியுன்வார்த்தையைவெருக்

நளராஜன் சொல் விருத்தம்.

வேதத்தையமுதாயுண் — வித்தகமுனியேயுந்தன்
பாதத்துக்கோர்விண்ணப்பம் பகருமென்மகளால்வந்த
கோபத்தைதணிக்கவேண்டும் குருபராமிஷ்டனத்தில்
சாதித்ததருவேன்கன்னிகா தானத்தைக் கொள்வீரே.

வசனம்.

கேளுமையா முனிராதா வேதாகமங்களெல்லாங் கற்றுணர்ந்தமகாநுபாவரே உமதுபாதாரவிந்தங்களுக்கு சரணம் சரணமையா யௌநா குமாரத்தியென்னுடன் சொன்னவார்த்தையால் தங்களுக்குவந்த கோபத்தைத்தணித்து யான்கொடுக்கும் கன்னிகாதானத்தையைக்கொள்ள வேண்டுமையா சுவாமி.

நளராஜன் சொல் அகவல்.

தேசமன்னவரே திருமணமகட்கு
காசினியுள்ளோர் கடுகியேவரவே
ஆசையாயோலை அன்புடனெழுத
பார்முள்ளோர்கள் பரிவுடன்வந்தனர்
விகர்ப்பமைமாநகரம் வீதிசிங்காரம்
அரண்மனைவாசல் அளவியவுபரம்
பந்தலிற்பதுமை பாங்குடனமைத்து
விச்சித்ரமான விநோதங்கள்செய்து
மேளவாத்தியங்கள் மிகுதியாய்முழங்க
வேதவேதியரும் விண்ணுளோர்சிலரும்
ராஜாராஜாக்களும் நகருள்ளயாவரும்
பந்தலிலமரர் பாங்குடன்முகூர்த்தம்
செய்யலாமென்றும் செப்பினதெல்லாம்
அரசாணிநட்டு அதர்க்குள்ளசடங்கும்
பெண்ணுமாப்பிள்ளைக்கு பிரியமாய்நலங்கும்
கன்னிகைக்குகந்த கனத்தபூஷணமும்
முனிவருக்குள்ள முச்சட்டைசெய்து
யாகஓமங்கள் யாவையும்நடத்தி
மங்கில்யம்வேதியர் வாசிகள்கூரி
குரானிகைகொடுக்க நன்முனிவாங்கி
நமசிவவென்று நளாயினிகழுத்தில்
மௌகல்யமுனிவர் மங்கில்யம்தரித்து
முடியதுபோட முனிவர்வேதியரும்
யாவரும்சேஷை அரிசிகளிரைத்து
சுப்சுபமென்று சோபனம்பாடி
திருமணம்நடத்தி சிரப்புடன்வாழ்நாள்.

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

கன்னியைதானம்செய்து கலியாணமுடித்தாய்மன்னு
யென்னிடமன்பாசந்தோ ஷித்தநானினிமேல்நில்லேன்
இன்னமுன்செய்தயாகம் யேகிநான்முடிக்கவேணும்
கன்னிலஅடவிக்கிப்போ நான்போகவிடைகொடாயே

வசனம்.

கேளும்மகாராஜனே நீரெனக்கு திருக்கலியாணம் முடித்தபடி யினாலே நான்மிகவும் சந்தோஷமடைந்தோம் நான் முன்னால் செய்த யாகம் நிரவேத்தவேண்டிய திருக்கிறது ஆகையால் வனத்திற்குப் போகவிடைகொடுக்கவேண்டும் மகாராஜனே.

நளராஜன்சொல் விருத்தம்.

வனம்நீருஞ்சென்றுலெந்தன் மகள்வரவேணுமோதான்,
சினமுந்தன்கருத்தெனக்கு சிறிதேனுந்தெரியவில்லை
அனர்த்தஞ்செய்குக்கல்சென்றால் அதன்வாலெங்கிருக்குமோதான்
கனத்தனைநாதானேக்கேட்டு கழருவேணிப்போதானே

வசனம்.

கேளுமையா முனிநாதாவனத்திர்க்கு நீர்போனால் எனதுகுமா ரத்தியும் கூடவேவரவேணுமோ கோபமாகிய உம்முடைய கருத்து யென்னசொல்லும் முனிநாதரே.

மௌகல்யரிஷிசொல் வசனம்.

கேளும்மகாராஜனே குருரமுள்ள நாயானது ஓடிப்போது அத ன்வாலானது இவ்விடத்திற் கிடக்குமோ ஆகிலும் உனது குமாரத்தி யை விசாரித்துச்சொல்லுகிறேன் மகாராஜனே.

மௌகல்யரிஷி சொல் விருத்தம்.

மடக்கொடிமானேதேனே வஞ்சியேசொல்லைக்கேளாய்
குடியெனக்கிவடமல்ல குகைவனம்செல்லவேண்டும்
படிமிசைதந்தைபக்கல் பரிந்துநீயிருப்பையோதான்
கடிதெந்தன்கூடவாரக் கருத்தென்ன உரைசெய்வாயே.

வசனம்.

கேளும்பெண்ணே நளாயினி எனக்குகுடியிருப்பு இவ்விடமல்ல நானாறல் வனத்திர்க்குப்போகவேணும் உந்தன்தந்தைவீட்டிலிருக்க கருத்தா அல்லவென்று யென்னுடன் கூடவரக்கருந்தாசொல்லடிபெ ண்ணே.

நளாயினி சொல் விருத்தம்.

தந்தைதாயகத்திருந்து சரவணோயிளமைகாலம்
பந்தமெவ்வர்ணகாலம் பத்தாவைகூடிவாழ்தல்
இந்தநல்நீதியெல்லாம் யிதர்க்குமுங்கேழ்விபுற்றேன்
எந்தன்தன்கருத்துன்பின்னால் யெங்கெனும்வருகுவேனே.

வசனம்.

கேளுமையாஎனதுபத்தாவே இளமைப்பருவத்தில்தாய்வீடுசெல வணியிலிருக்கவேண்டும் எவ்வர்ணகாலத்தில் புருஷனோடுகூடிவா ழ்தலே நன்றென்று சாஸ்திரங்களிற்சொல்வது கேழ்விப்பட்டும் உம் முடனேகூட வராதிருப்பனோ நானுமிதோவருகிறேனையா சுவாமி.

மௌகல்ய ரிஷி சொல் தரு.

கானகம் வாரேனென்று வீணாகப்பேசுறாய்
கஸ்தி நீபடவேணும் பெண்மயிலே

நளாயினி சொல் தரு.

கஸ்திப்பட்டாலென்ன கணவனுருடன்கூடி
கலந்திருந்தல்லோகர்ப்பு பிராணநாதா

மௌகல்யரிஷி சொல்தரு.

கர்ப்பினாலாவதென்ன காலைமுதல்பணிவிடை
கடினமாய்செய்யவேண்டும் பெண்மயிலே

நளாயினி சொல் தரு.

பணிவிடைபத்தாவுக்கு அடவுடன்செய்தாலே
பாகதியெனக்குண்டாகும் பிராணநாதா

மௌகல்யரிஷி சொல் தரு.

யென்னபாகதி அன்னமுங்கிடையாது
யேனோகாய்கரிதின்ன யெழுந்தோபெண்ணே

நளாயினி சொல் தரு.

அன்னமென்னதாய்வீட்டுக் கமுர்தமாணாலும்பத்தா
உன்னுடன்கூழுங்கிடாமோ பிராணநாதா

மௌகல்யரிஷி சொல் தரு.

சன்மயால்குடிசைகட்டி சயனங்கள்பாரைமீதில்
தையலேஉனக்கடுக்குமோ பெண்மயிலே

நளாயினி சொல் தரு.

கல்மேல்படுத்தாலும் கர்ப்புக்கெடுதியுண்டோ
கழருநீர்சொதென்னமோ பிராணநாதா

மௌகல்ய ரிஷி சொல் தரு.

காமாகமுமென்றாய் கடுகெனங்கிடையாது
கபடமல்லவிருந்தன் பெண்மயிலே

நளராஜன் சொல் தரு.

காமசுகம்பர்ப்பனிக்கேன் கனவனூர்பணிவிடை
கருத்தேசுகமதாகும் பிராணநாதா

மௌகல்யரிஷி சொல் விருத்தம்.

யெத்தனைசொன்னாலுந்தான் யெநதன்பின்வரவேனென்றாய்
பத்தினியுன்தன்கர்ப்புபகருவேன் வனையேசென்றால்
நத்தியுன்தந்தைவீட்டில் ராஜலைபோகம்பெத்த
சித்தினியென்னொடொத்து சீக்கிரம்நடந்திடாயே.

வசனம்.

கேளும் பெண்ணே யெத்தனைசொன்னபோதிலும் யென்கூடவே வருகிறேனென்று சொல்லுகிறாய் ஆனாலுனது தகப்பனாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சீக்கிரம் யென்பின்னால் நடந்துவாருப்பெண்ணே.

நளாயினி சொல் விருத்தம்.

தந்தையேசரணமையா தனையாள்யானுன்வயற்றில்
விந்தையாய்பிறந்துயெந்தன் விதியினால்முனிவர்க்கானேன்
பந்தமாய்பத்தாவின்சொல் பழுதில்லாவனமேசெல்ல
சிந்தையுமொத்தெனக்கு சீர்பெறவிடைகொடாயே.

வசனம்.

கேளுமையா தந்தையாரே உமதுபாதாரவிந்தங்களுக்கு சரணஞ்சரணமையாநீர் ராஜாதி ராஜராகிய உமது வயத்திற்பிறந்து யெனதுவிதியினால்மகாமுனிக்கு மாலைசூட்டினேன் ஆகிலுமவர்வார்த்தைதப்பாமல் வனத்திற்குப்போக சந்தோஷமாய் விடைகொடுக்கவேண்டுமையா சுவாமி.

நளராஜன் சொல் விருத்தம்.

புத்தியிலதிகமான பொற்றுமென்மகளேநீயும்
குற்றமில்லாமலிந்த குவலயம்துதிக்கவாழ்வாய்
சித்தமொத்தவர்பாற்சென்று செய்பணிபிசகிடாமல்
நித்தமுங்கூடிவாழநீயும்போய் வாருமம்மா.

வசனம்.

கேளுமம்மணி இந்தபூலோகமெல்லாம் உன்னைதுதித்து புகழும்படியாய் வாழக்கடவாய் உனதுபத்தாவுக்கு யாதொருபணிவிடையும் குறைவில்லாமல் செய்துக்கொண்டு யிருக்கவேண்டும் ஆனால்வனத்திற்குப்போய் வாருமம்மணி.

மௌகல்யரிஷி சொல் தரு.

வாராய்மானே வனஞ்செல்ல
நேராய்தேனே
வாராயெந்தன்கூட மலையாதேதலைநாம்
காரிருள்வனம்நோக்கி கடிகிரமேகுவோம். (வாரா)

நளாயினி சொல் தரு.

வருகுவேன்முனியே உம்முடன்கூட
இருக்கென்னதினியே
கருவிலமைப்பின்படி கர்த்தருனுடன்கூடி
பெருகியவனம்செல்ல பேதைமுன்தபஞ்செய்தேன். (வருகு)

மௌகல்யரிஷி சொல் தரு.

பாராய்பெண்ணே பருவத
மேருவாய்கண்ணே
பாராய்பெண்ணேயிங்கே பலவதிசயங்களும்
போனமிருகங்கள் பெருத்துமேயிருப்பது. (பா)

நளாயினி சொல் தரு.

மலையென்பதிதுவோ பிராணநாதா
கலையென்பதிதுவோ
மலையென்றுங்கலையென்றும் நிலைதெரியாதெனக்கு
சிலசிலவிதமென்றும் பலபலவதுவென்றும். (மலை)

மௌகல்யரிஷி சொல்தரு.

மானென்பதிதுதான் மலைக்குகை
தானென்பதுதான்
மானேயின்னம்பாரும் கானகந்தன்னிலே
ஆனைமதத்துபெண் ணானைமேல்விழுவது. (மா)

நளாயினி சொல் தரு.

விலங்கினமுதலாய் தன்னிடை
குலங்களைபலவாய்
துலங்கவேபாரென்று யுரைத்தபடியினாலே
கலங்களைபெற்றுப்போல் நான்சந்தோஷித்தனன். (விலங்)

மௌகல்யரிஷி சொல் தரு.

கானலாம்பெண்ணே பின்னைப்போக
வேணாதுகண்ணே
கானலாங்கண்ணுலேகாட்டில் வேணகனிவர்க்கங்கள்
தோஷினமட்டும்பார் சேமித்திருப்பது. (கா)

நளாயினி சொல் விருத்தம்.

சந்தனம்பாரிசாதம் சண்பகம்சோகுபுன்னை
விந்தைநற்புஷ்பம்பூத்து விசித்ரமாயிருக்குமிந்த
கந்தமாதனமோயின்னங் கப்புரம்தொலவோசொல்லும்
சுந்தரபிராணநாதா தோகையாளரியத்தானே.

வசனம்.

கேளுமையா சுவாமிபிராணநாதா இந்தவனமானால் கந்தமாதனம்போலிருக்கின்றது ஆகையால் தாங்கள் போக வேணுமென்கிறவனம்திதுவோ அல்லது யிதற்கு அப்புறந்தானோ சொல்லவேணுமையாசுவாமி.

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

தூலவதாய்போகவேணும் தோகைநான்கிழவனாச்சே
பலமெனக்கில்லையய்யோ பாவித்தான்னடக்கமாட்டேன்
நல்முன்னபிராணநாதா நங்கையாள்தோளிலேறும்
சிலசிலதூரஞ்சென்றால் சிவன்செயல்படிநடப்போம்.

வசனம்.

கேளும் பெண்ணேபின்னம் வெகுதூலதூரம் போகவேணும் யெனக்கானல் நடக்கக்கூடவில்லை எனென்றால் வயதுசென்ற கிழவனாநேநானென்னசெய்வேனடிபெண்ணே.

நளாயினி சொல் வசனம்.

கேளுமையா சுவாமியெனது பிராணநாதா ஆனாலெனது தோளின்பேரில் நீயேரிக்கொண்டால் யெடுத்துக்கொண்டு போகிறேனையா சுவாமி.

மௌகல்ய ரிஷி சொல் வசனம்.

ஆனால் குனியடிபெண்ணே யேரிக்கொள்ளுகிறேன்.

நளாயினி சொல் தரு.

பரமனூர்தபம்செய்யும் பத்தாவுக்குபாரியாக
புவித்துதேயென்தபம் பிராணநாதா

மௌகல்ய ரிஷிசொல் தரு.

கருதிமுடையோனே கருத்தினில்லையாமல்
கழநும்தபமேதடி பெண்மயிலே

நளாயினி சொல் தரு.

அரிஅரன்பிர்ம்மனென்ன அநவைக்குஆண்தெய்வம்
அதனுவும்மைதுதித்தேன் பிராணநாதா

மௌகல்ய ரிஷி சொல் தரு.

தாய்தந்தைவிட்டிருந்து சம்பத்தாய்வாழாமல்
சகிக்காததுன்பமுற்றாய் பெண்மயிலே

நளாயினி சொல் தரு.

இன்பமும்துன்பமும் யெனக்குநீரல்லாமல்
யிதுவிடவேறேயென்ன பிராணநாதா

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

இந்தநல்வனத்தில்வாச மிருக்கவேவேணும்பெண்ணே
கந்தமூலங்கள்கொண்டெழுகிலீ வரவேவேணும்
சிந்தையுங்களிக்கயானும் சிவயோகம்செய்யப்போறேன்
பந்தமாய்ஜலம்திரட்டி பாங்குடன்வருகுவாயே.

வசனம்.

கேளும் பெண்ணேயிந்தவனத்தில் சிலது நாள் வாசம்செய்யவேண்டியதுந்தவிர சிவபூசைநடத்தவேண்டிய திருக்குது ஆகையால் பூசைக்குவேண்டிய சமுத்துபுஷ்பம் ஜலமுதலாகியதும் கொண்டுவரவேணுமடி பெண்ணே.

நளாயினி சொல்வசனம்.

அப்படியே கொண்டுவருகிறேனையா சுவாமி பிராணநாதா.

நளாயினி சொல் தரு.

பூசைசெய்யுமெந்தன் பிராணபத்தாவுமக்கு
பிரியமாய்சமுத்துநான் கொய்து
பாசமுடன்புஷ்பம் பரித்துசலம்திரட்டி
பாங்குடன்வந்தேனே வெய்து (பூசை) —

மௌகல்ய ரிஷி சொல் தரு.

ஆசையானவெந்தன் அருமையே
சிவபூசை யாச்சுது
அருங்கனி காய்விழுங்கவை
கொண்டுவந்தால்பசி போச்சுது.

நளாயினி சொல் தரு.

பாசமானவெந்தன், பத்தாவே கனிகொண்டு, வந்தேனே
பசிதணிந்திட அதைவெபாசியும் வெம்பிரானைபாசபந்தனே.

மௌகல்ய ரிஷி சொல் தரு.

உண்டபின்வெள்கண் வாய்கவேணுமடிபெண்ணே
உன்னையாலென்காலை ஒத்தப்பிடிக்கவேணும்கண்ணே

நளாயினி சொல் தரு.

பாதம்பிடிக்க பாகநிக்காளாகேணையா
பாமன்திருவிளை யாடலிதுவெல்லாமெய்யா

பொது விருத்தம்.

இப்படிசிலநாளா யிருந்திடுங்காலந்தன்னில்
கர்ப்பினிமிகுந்தமங்கை காதலைபரிபவேண்டி
விர்ப்பனமுனிவர்மெய்யில் வேறொருரூபமாத்தி
கட்பிலாகுஷ்ட்டரோகம் காருந்தான்வளர்த்திரே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக சிலநாள் புருஷன் பெண்சாதியுமாக காலங்கழித்து வரும்போது நளாயினியம்மன் கர்ப்புநிலையறியத்தக்கதாக மௌகல்யமகாரிஷியானவர் தானுக்குதான் பெருவியாதியாகிய குஷ்ட்டரோகம் வரும்படியாக வளர்த்து வருகர்செய்துக் கொண்டார் அதைப்பார்த்து நளாயினியம்மன் புலம்புவதாவது காண்க.

நளாயினி சொல் விருத்தம்.

ஆசையுமன்புமுள்ள அண்ணலேபிராணனேசா
மாசிலாநிதேகந்தன்னில் வளர்ந்திடும்வியாதிநோய்க்கு
வாசமாயிருப்பதெங்கள் அம்மனம்தனித்திலோமுற்று
போதனைபுரிந்திடாமல் புண்ணுமென்றிதுவோ.

நளாயினி புலம்பல் தரு.

நசன்செயலிதுவே பிராணேசாநீ
வேதமாறு யதவே
நேசமாளதுரையே அடியாள்செய்த
பூசையான குறையோ
பாசமாய்வெண்பிரந்திட்ட பலனிது
காசினியோர்வையை காணும்வினவிது. (சகன்)
முன்னுளின்தலைதியோ பிர்ம்மதேவன்
பின்னுளித்செய் சதியோ
கன்னியெனக்கொகவி யாணம்செய்துமெய்ப
வெண்ணிரேன்மனம் குன்னலாச்சுதையா. (சகன்)
மகுத்தவமுனியோமே உம்மையிந்த
ஜெகத்தினி லிவாறு
சுகந்தடனேயிருந்ததேகம் புண்ணாச்சுதே
அபத்தினன்வந்தபின் னவதிகானலாச்சுதே. (சகன்)
தீவினைபொருப்பிரோ உம்முடைய
ஆவியை மருப்பிரோ
பாவிநாநிருந்து பலனென்னஉமக்கிந்த
நோவுக்குதவியுண்டோ லோபிநான்வந்தது. (சகன்)

மௌகல்யரிஷிசொல் விருத்தம்.

கர்ப்புள்ளமாதுதங்கள் கணவனுக்காயுசண்டாம்
அர்ப்புதசெல்வம்யாவும் அதுவொன்றுங்குறைவிராது
அர்ச்சனையுனைநானப்போ தொட்டநாள்முதலாயிந்த
ருத்தமாம்பெருவியாதி கொடுவினைமூண்டதையோ.

வசனம்.

கேளும்பெண்ணே கர்ப்புடைய ஸ்ரீகளால் புருஷருக்கு ஆயுசவந்துவரும் மற்றசெல்வமுதலாகியதும் ஒன்றுமொன்று குறைவிராஅப்படியிருக்க உன்னை நான் தொட்டு தாலிகட்டின நாள்முதலாபருவியாதியாகிய வினைக்கி ஆளானேனடிபெண்ணே.

மௌத்கல்யரிஷிசொல் தரு.

பட்டிசண்டாலியிவி அநுப்பாவிவெரும்ஆவி
காலைதட்டிதடையாடுரேன் பட்டி

மட்டியெனை நீயிப்போ கட்டிநீயழுகிறாய்
கஷ்டட்டமுனக்கில்லை கஷ்டமெனக்கல்லோ பட்டி

நளாயினிசொல் தரு.

கோபம்யென்மேல்செய்தீர் குருவிங்கன்நாதிங்கள்
அபராதமைத்துமெண்ணமல் கோபம்
சாபம்நான்முன்செய்த பாபிதனெல்லாம்
பாலமென்மேல்வைத்து கோபமுன்மேல்வைத்தா கோபம்

மௌகல்யரிஷிசொல் தரு.

மாதவித்தினிபோடி அடிபடிகோடி மடி
வெருப்பேமும் வெருப்வேஷம்கோட்டுராய்நீ மாதவ
சாதனைக்காரியல்லோ வேதனைவந்ததல்லோ
சோதனைசெய்தென்னை வாதனைசெய்யின்னை. மாதவி

வருத்தம்யென்மேல்மோதாரீர் பணிவிடையில்அருவளவும்
நான்தப்பிதம்செய்ததுண்டோ (வருத்தம்)
குரித்தகாள்முதரைக கருத்துன்மேலகலாத
செருத்தவன்செய்தகுற்றம் பொருத்தாளுவதேமெத்தம். மா

நளாயினி சொல் விருத்தம்.

யெப்படியெனைவைதாலும் யென்னிடபாக்கியந்தான்
சொற்படிநடப்பேனித தொல்லைக்கெல்லாவென்றும்
கைப்பிடித்தவிம்சம்செய்யும் கருத்துமேயிராவிட்டாலும்
நற்படிகுளிர்விட்டு நருபணம்பூசுவேனே.

வசனம்.

கேளுமையா சுவாமி பிராணநாயகா அனேகம்வைத்தபோதிலும் யென்பாக்கியமேபாக்கியம் ஆகிலுமிந்தவியாதிக்கு அவிழ்தங்கொடுத்து வியாதியை நீக்கவென்றாலாகவிட்டாலும் தாங்கள் திரேகத்தை சுத்திசெய்து நல்லகளபகஸ்தூரி சந்தனம் யிவைகளைப்பூசிசேவை செய்வேன் முனிநாதரே.

நளாயினி சொல் தரு.

பத்தாவைசுத்திசெய்து பரிமளமிகப்பூசி
பக்குப்போகிப்பணிப்பேன் பண்புடனே
குத்தமாகரனைத்தில் வைத்தப்புழுக்களைதான்
கூச்சமில்லாதெடுத்து கழுவி

மெத்தவும்புல்லரிசி குத்திஅன்னபாகஞ்செய்து
விருந்துடனூதவித்தேன் மெய்யா
கர்த்தனுமென்கணவர் தருந்துமன்னம்அன்னத்தினில்
கைவிரலித்தவிழுக் கண்டும்
சற்றுமேயென் மனதில் குற்றமாய்நினையாமல்
சகித்துஅன்னத்தைதான் உண்டுவேனே
அப்போஉனதுதேகம் யென்னமாய்நாருதோ
அருமையாள்படிபேபிதோ (மெய்யா)
சையோகமாயிப்போ சயனித்துவித்திரைதான்
செய்தாலியோ துமையா அத்தரே.

மௌத்கல்ய ரிஷி சொல் விருத்தம்.

தையல்நீயெனக்குசெய்த சவரக்ஷணைபோதம்யிப்போ
வைகயின்தீர்த்தமாட மனதினிலாசையுண்டு
கையொடுகாலும்வல்லே காதல்கொண்டென்னசெய்வேன்
அய்யனுர்செயலாவித்த அவதிகான்படலாச்சையோ.

வசனம்.

கேளும்பெண்ணே நீயெனக்குச்செய்த உபசாரணைப்போதும் ஆகிலும்தீர்த்தயாத்திரைபோக அனேக அபிலாசையுண்டு நானுனல் கைகால் முடவன் யென்னசெய்வேன் சிவன்செயலிப்படியிருக்கிறது பெண்ணே நளாயினி.

நளாயினி சொல் விருத்தம்.

தீர்த்தாங்களாடவென்று செப்பியபிராணநாதா
பார்த்திபாகூடைதன்னில் பவனித்தால்சிரமேற்கொள்வேன்
யாத்திரைபயணமாக அடியாள்மேல்கிருபைசெய்து
வேத்தனையோசனைசெய்யாமல் விரகுடனெழுந்துமேரே.

வசனம்.

கேளுமையா சுவாமி தீர்த்தயாத்திரைசெய்ய இஷ்டமிருக்கிறபடியினாலே இதோ இந்தவணக்குலவரிடத்தில் ஒருகூடைவாங்கிக்கொண்டு வந்தேன் வேறுயோசனைசெய்யாமல் யிந்தகூடையில் யெழுந்தருளினாலெடுத்துக்கொண்டு தீர்த்தங்கள்தோரும் ஸ்தானம் செய்துவைக்குறேனையா பிராணநாதா.

மௌகல்ய ரிஷி சொல் வசனம்.

அப்படியே உன்வாக்கைப்போல அந்த கூடையில் உட்கார்ந்து க்கொண்டேன் யெடுத்து நடவும் பெண்ணே நளாயினி.

நளாயினி சொல் தரு:

தீர்த்தங்களாடயேகுவோம் நாமிருவோரும்
தீர்த்தங்களாட யேகுவோம்.
பார்த்திபாயென துபிராண பத்தாவேநாங்கங்கைமூழ்கி
பாவங்களதமாகும் பாருமெய்யா
யமுனைநதியதனில் ஆதிநாள்முன்செய்தோஷம்
யகத்திடுமென்றும்வேதம் பொய்த்திடுமோ
சரஸ்வதிதீர்த்தமதில் சமனைமூழ்கினால்
சகலபாவமொழிந்து சாயுச்யமேபெறலாம்
கோதாவரியதனின் கூடிநாம்ஸ்நானம்செய்தால்
கொடிதானசிசுயத்து பொடியாகுமென்றுசொல்வார்
நருமதைத்தீர்த்தமதில் நாடிஸ்நானம்செய்தால்
நல்லபலன்தருமென்று சொல்லுமுன்றாலெல்லாம்
துங்கபத்ராநதியினில் சேர்ந்துநாமூழ்கினால்
செய்தவினையகன்று சேர்க்கும்பரகதியில்
கன்னிகைநதிதனிலே கலந்துஸ்நானம்செய்தால்

கர்மபாவமொழிந்து கர்த்தன்பதம்பெறலாம்
தாமிரநதியினில் தயங்காமல்ஸ்நானம்செய்தால்
சர்வபலன்பெறலாம் சதுராகவே,
கிருஷ்ணைநதியதனில் இரமமாய்மூழ்கினால்
கெதிவேறுதவும்வேண்டாம் முனிநாதா

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

தீர்த்தங்களாடச்செய்தாய் திரேகமும்புளகமாச்சு
மாத்திமுன்வழிமேசென்றால் வருந்துமெய்வெயிர்த்ததாலாது
சாற்றுமிவ்வழியேயேகில் சாளுவதேசம்போவோம்
நாற்றிசைவீதிசென்று நம்பிடவயிர்வளர்ப்போம்.

வசனம்.

கேளும்பெண்ணே யென்மீன நவதீர்த்தங்களிற் ஸ்நானம்செய்வித்தாய் இப்போமறுபடியும் வனத்திற்குப்போனால் வெய்யலினாலே யென துதேகம் தாளாது அதுவுமன்றியேதேசஞ்சாரம் செய்யவேண்டும் இதோபோகுதே கொடிவழி இந்த வழியேபோனால் சாளுவதேசம்போகலாம் அந்தப்பட்டணத்தில் சிலநாகாலம் சஞ்சரிப்போமடி பெண்ணே நளாயினி.

நளாயினி சொல் வசனம்.

ஆனாலந்தவழியேபோகிறேனையா பிராணநாதா.

நளாயினி சொல் விருத்தம்.

தனிவழிகடந்தேயிந்த சாளுவதேசம்வந்தோம்
இனியொருபயமுமில்லை யின்னகர்வீதிதோறும்
கனிவுடன்பிக்ஷைவாங்கி கடிகினன்வாரேனையா
முனிவர்நீருண்ட அன்னம் மீதியானுண்ணுவேனே.

வசனம்.

கேளுமையா சுவாமி பிராணநாயகா வழிகளெல்லாம் கடந்து சாளுவபட்டணம்வந்து சேர்ந்தோம் இனிமேற்பயமில்லை ஆகிலும் இன்னகர் வீதியில்நின்று ஜீவாதாரம் பிச்சைவாங்கிவருகிறேன் அதை தாங்களுண்டு கழித்த அன்னம் அடியான் உண்வேனையா சுவாமி.

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

அன்னமேதெரிந்திடாயோ ஒளவைசொல்நீதிவாக்கியம்
பெண்ணுதான்தந்தாலுந்தான் இரப்பதுயிகழ்ச்சியல்லோ
கன்னியேயென்னசெய்வேன் கைகாலுமுடலனபானி
இன்னதுயர்வளர்ப்ப தெப்படியறிந்திடாயே.

வசனம்.

கேளும்பெண்ணே யென்ன கற்றபோதிலும் இரப்பது இகழ்ச்சியென்று அவ்வை நீதிவாக்கியம் சொல்லியிருப்பது தெரியாதா ஆகிலும் நாறேறுகைகால்முடவன் என்வயர் எப்படிவளருமோ தெரியாதடி பெண்ணே.

நளாயினி சொல் விருத்தம்.

என்னிடபிராணநாதா எனக்குஉத்தாரம்தந்தால்
நன்னியமனைகள்தோறும் நான்குற்றும்கூலிவாங்கி
உன்னிதசமையல்செய்து உனக்குநான்படைத்தபின்பு
கன்னியும்மீதிசாதம் கண்டுயேபொசிப்பேனானே.

வசனம்.

கேளும் பெண்பிராணநாயகா அடியாளுக்கு உத்திரவுதந்தால் இன்னகர்சென்று கூலிக்குக்குத்தி அந்தகூலி அரிசியைவாங்கிவந்து சமைத்து தங்களுக்குப்படைப்பேன் தாங்கள் பொசித்துவைத்த அன்னத்தையுண்டு காலங்கழிப்போம் பிராணநாதா.

மௌத்கல்யரிஷிசொல் விருத்தம்.

பன்னிநீபேசவேண்டாம் பசிதகிபசியால்நொந்தேன்
இன்னகர்தன்னில்மேவி இணையிலாகூலிகுத்தி
கன்னிநீசமையல்செய்தால் காதலாய்பொசிப்பேன்பெண்ணே
இன்னதுசரிதானிப்போ யேகிநீகொண்டுவாடி.

வசனம்.

கேளும் பெண்ணே இவ்வூரிற்சென்று எவ்வீடுகளிலாவது தானியம்குத்தி கூலிவாங்கிவாரும் நான் பசியோடிருந்துரேன்பெண்ணே.

நளாயினி சொல் வசனம்.

இதோ போய்வருகிறேனையா சுவாமி.

நளாயினி சொல் தரு.

குத்தும்பணிவிடை நித்தம்செய்வோமானே
கூலிக்குக்குத்தென்னை வேலைக்கொள்வாரில்லையோ
பத்தனுரைக்கிட்ட கட்டளைப்படியேயிந்த
பாவிபெத்தனைக் கூலியழைப்பாரில்லையோ
அந்தவேலைக விட்டபோதிலும்செய்வேன்
எரியாளெந்தனை யேவியழைப்பாரில்லையோ

தெருதெருவாய் சுத்திசுத்திரான்வாரேன்
தேடிவாவென்று வேலையிடுவாரில்லையோ

பொதுவசனம்.

ஆரடிகூலிக்காரி கூலிகொடுக்கிறேன் இந்தநெல்லைக்குத்தடி பெண்ணே.

நளாயினிசொல்-வசனம்.

ஆனாலடியேன் குத்துகிறேனம்மா தாயே.

நளாயினிசொல் தரு.

நேர்ந்தவிதிப்படியோ நானேறுபின்னகர்வீட்டில்
நெல்லுகுத்திகொழிக்க லானேனே-ஒலிநிலவசமே
நெல்லுகுத்திகொழிக்க லானேனே.
பார்தனில்நான்பெண் பிறந்தநாள்முதலாயிந்த
பணிவிடைகள்நான் செய்யதில்லையே
வலதாய்தீவினை வசந்தாறே
முன்னாற்செய்த பாவங்களோதோ (நேர்ந்த)

அரியரன்பதம்சரணம் அன்புறவைக்காதிதலோ
ஆரியம்கம்புசோளம் குத்தவுமானேனே
கரியமேனியன்தங்கை நளாயங்கண்டாலிப்போ
கயலைகொண்டுயிர் மாயுவாளையோவின்றோ (நேர்ந்த)

பிராமணதாசர்சொற்	றவர்லாதுபோவீரோ
பேதைக்கான்செய்தபூசை	தவக்குறைதானோ
கருணையாலவன்விதித்த	விதியையாராலேப்போ
கடக்கவென்றவர்க்கு	தாமோதிநாய்ராய் (நேர்ந்த)
அம்மாதாயேசக்தி	ஆச்சாரியராய்
அரிசிகொய்யுங்கலி	செய்தேகவேராய்
சும்மாயிருந்தால்பொருள்	போகுதக்கூலி
தோணும்முதகையி	லென்றீநபாலி (நேர்ந்த)

பொது விருத்தம்.

தானியம்குத்தக்சொன்ன வகையலால்விலைசமுற்று
மாவினைவியக்தவேல மாருமேமாடன்றலம்மா
ஆறனாம்கூலிகொய்யும் அரிசிபுமளிக்கேதனிப்போ
தேனேநீசெல்வாயுக்க னிருப்பிடமினக்குந்தானே.

வசனம்.

வேலைபிட்ட அம்மணிதான்சொல்கிறேன் கேளம்மா உன்று
லேபிக்கவேலைசெய்யசமல்ல ஆகிலும் நீசெய்ததுயேதோ விதிவசம்
ஆனாலுன் கூலியைக்கொடுத்தேன் வாங்கிக்கொண்டு உமது இருப்பி
டம்போய்ச்சேருமம்மாதாயே.

பொது விருத்தம்.

இந்தபடியினம்நிறமும் கூலிகுக்கி
இதைதானமக்காபத்தாயுக்கிதவதான
வந்தனஞ்செய்தமுதாட்டி வளர்த்தவந்தாள்
மாவிலக்கிறந்தவன்சயர்க்கு மாண்டவைமா
சிந்தைகளித்தேசாந்ந சாரஞ்செய்து
செப்புகர்சாருவமாகடவிதன்னில்
அந்தமுடன்கிவருப மேடங்கொண்டு
அதிவிபயோகத்திருக்கவருகுறாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் நளாயினி அம்மன் பிரிதிநினம் கூத்தலிரல்குத்
தி கூலி வாங்கிக்கொண்டுவந்து சமைத்து மௌத்கல்ய மகாமுனிக்கு
உபசரணையோடு அன்னம்பரிமாறி அவர் உண்டு களித்தபின்பு அன்னத்
தைத்தானும் புசித்து காலங்கழித்துவருகொண்ணிலே மகாதவசிரே

ஷ்ட்ட சிகாமணியாகிய மாண்டவ மகாரிஷியானவர் தேசசஞ்சாரஞ்
செய்து இந்த சாருவ பட்டணத்துக் கருகாமையாகிய நந்தவனம்
மகாகுளிர்ச்சியும் விநோதமுமாகையால் நிலயோக நிஷ்டைசெய்யத்
தக்கதாக தனது சிஷர்களுடனே தபவேடம்பூண்டு வருகிறவிதங்
காண்க.

மாண்டவ ரிஷிவருகிற விருத்தம்.

தாமணிபுகழசதுர்மறைகமர்ச்சி சகலபல்லாண்டுகள்கூற
சிரணிசடையுமுடியுமேமதுலங்க ஜெபமாலைகண்டிகைதண்டும்
சேருள்ளநிஷ்டைக்குசந்ததுதரித்து நிமலனைப்போலவேசோபிக்க
மேருவைநிகர்த்தமாண்டவமுனியும் நிகரவேவிளங்கினர்தானே.

மாண்டவரிஷி வருகிற தரு.

மகமேருவைநிகர்ந்த	மிகுதபக்கிரியுயர்ந்த
மாண்டவமுனிவர் வந்தனரே.	
மிகுவனமதில்கணபதி	மாண்டவரிஷிவந்தனரே
ஜெகமெங்குமேதுதிக்க	முகவிங்கருள்பெத்த
சித்தன்விதாரை	கர்த்தனையிவனென
செப்புவருலகினில்	அற்புதமாகவே. (மகமே)
சடைமுடியுந்துலங்க	தண்டுகமண்டலமும்
விடையேறுமீசன்போல்	வெண்ணீருமேயணிந்து
விண்ணவரெவர்களும்	மண்ணினிலவரெனும்
கண்ணுறுதல்கூர்ந்துமே	யென்றுநல்செய்திட. (மகமே)

தர்ம்மநெறி தப்பாத	சாளுவனையன்பீது
தங்கிச்சிலநாளலம்	தபயோகத்திலிருக்க
சதுர்மறைவேதமும்	அசாணவாதமும்
வெறிவொருவரில்லா	பதிவிலவரேயல்லால். (மகமே)

நிஷ்ட்டையிலேயிருந்து	நிமலனைக்காணவேண்டி.
நிருவிகற்பமிருந்து	நிலையைப்பான்சார்ந்துதாண்டி.
நித்தனை அத்தனை	கர்த்தனை சித்தனை
பத்தனையடியேனை	முத்திக்குவரிக்கெண. (மகமே)

மாண்டவரிஷி சொல் விருத்தம்.

சிவசிதம்பரமேஷ்வர சிரெபருமன்னைத்தில்
தவனிஷ்டைநிஷ்ட்டையோகம் தான்செய்யவேணுமிப்போ
அவமதிசெய்யாதீயென் காசனந்தென்பட்டை
கவனமாய்ப்போட்டுக்கையைக் கட்டிமூச்செரிந்திடாயே.

வசனம்.

அடா சிஷோ! சிவசிதம்பரம், எங்சுவாமி! இந்த தந்தவனத்தில்நா மாளுல் சிவயோகம்செய்யவேண்டும் ஆகையால் தருந்த இடம்பார்த்து ஆசனம்போட்டு யோகத்தெண்டு யோகபட்டை இதுகள் தயார்செய்து நீயும் பயபக்திபுடனே கையைக்கட்டிக்கொண்டு வாயைமூடிக்கொண்டு பெருமூச்சுவிடாமலிருக்கவேண்டும் பிள்ளாய சிஷியே!

சிஷர்சொல்-வசனம்.

சுவாமி! சுவாமி! நாங்கள் பெருமூச்சுவிடக்கூடாது பெருமூச்சு விடக்கூடாது. ஆனால் கீழுக்கும்மேலுக்கும் ஒரே ஆப்பாய் அடித்து விடும் சுவாமி! அதேபோம்பிள்ளாய் அந்தப்பயலே.

மாண்டவரிஷிசொல் சிசபந்தியம்.

அத்தனே அரனே	அகரமிலினே
அமலனே அம்பல	வாணலிங்கா
கர்த்தனோ வித்தனே	கைலாசநாதனே
கருணையாலயநிருத்	தாளிநாத
முத்தனே சித்தனே	மூன்றுகண்ணுடையானே
மூலகாரணமனே	முத்திவித்தே
வித்தனே நீலா	நிலகண்டோர
நிர்மலரூபியே	நிர்த்தநடனு

சுத்தனேயிந்தநாள்	பக்திமாருக
மெத்தனுனைநோக்கி	சித்திபெறவே
வைத்தவெண்ணிருவிழி	வசித்தநடுவில்
பக்தநான்தொழுதுன்	பாதமருளே

வசனம்.

இப்படியாகவிழித்தகண் விழித்தபடியே மாண்டவரானவர் சிவ யோகநிஷ்ட்டையிலிருக்கிற காலத்தில் அவ்வனத்துக்காமாகிய சாளு வபட்டணத்தையாள்ப்பட்ட சாளுவமகாராஜன் மந்திரிப்பிரதானிக ளுடனே கொலுவக்கவருகிற விதங்காண்க.

சாளுவராஜன் வருகிற விருத்தம்.

தன்னிகரில்லாயேகச் சக்ரபூபதியேயாகி
இன்னிலந்சாளுவநாடு மிராச்சியமரசுசெய்யும்
மன்னர்மந்திரிகள்சூழ மகாசபைகொலுவதாக
கன்னல்வில்வாள்வேலேந்தி கர்த்தன்சாளுவன்வந்தானே.

சாளுவராஜன் வருகிற தரு.

தாரணிபுகழ்பெத்த	மாரனெனவேயொத்த
சாளுவராஜன்வந்தான்	மிருதணமதில்கணபதி
சாளுவராஜன்வந்தான்.	

பாரியொபாளுமன்னவ் — நிரவொன்ரொப்பிட
பாங்குடகரசர்கை — ஓங்கியேகூப்பிட-கருள்
பகர்சருபிரு — அர்ப்புரவிலகொன
சொல்தவரான்பிரு — சத்தியகிவிகொ-வெரு. (கார)

வெற்றிக்கொடிபரக்க — கற்றம்புகழ்சிறக்க
ரத்தினமுடிதுலங்க — முத்துக்குடையிலங்க கருள்
காசரிகபுஜம் — வாருவில்லயமுடன்
போகமாசகவை — போகசீழ்ரமுடன். (கார)

இதவாத்தியமீட்டி — இன்னரத்தம்பூருமீட்டி
மாதர்நடனமாட — மங்களஞ்சோபனம்பாட கருள்
மாதவசிவந்தியர் — ஆசிகள்கூற
சாதனபேரிகை — சத்தமுமோத. (கார)

மன்னர்மன். கீகரும் — வைசிகர்பத்திட
மந்திரிமாருபுரம் — பத்தியாய்ஜாலித்திட கருள்
மாமகர்மேடையில் — தாமொருபிக்திரன்போல்
சோமனுதிகரிலா — விமனுமெதிரிலா. (கார

சாளுவராஜன் சொல் விருத்தம்.

மந்திரிமாரேயித்த மாநகர்சாளுவதேசம்
பந்தமாய்மாரிபெய்து பயிர்குடிக்ஷேமந்தானோ
அந்தமாயாலயங்கள் ஆருகால்பூஜையுண்டோ
சிந்தையுமகிழுநானே செப்புவீர்மந்திமாரே.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே நம்மிட சாளுவதேசத்தில் மாதமும் மாரிபெய்து பயிர்குடிகள் க்ஷேமந்தானோ தேவாலயங்கள் ஆருகாலம் பூசைநடந்து வருகுதா சொல்லுங்கள் மந்திரிமார்களே.

மந்திரிகள் சொல் விருத்தம்.

எந்தனையுந்தன்னாட்டில் மாதமும்மாரிபெய்து
குன்னமில்லாமல்ருந்து குடிகளுங்க்ஷேமமாய
அன்னவே ஆலயங்கள் ஆருகால்வேளாபூஜை
சென்னமும்வாராதொசனும் பிசகில்லையென்றார்வேந்தே.

வசனம்.

கேளுமையா மகாராஜனே நம்முடைய தேசங்களெல்லாம் மாதமும்மாரி பெய்து குடிகள் யாவரும் க்ஷேமமாயிருக்கிறார்கள் ஆலயங்கள் ஆருகாலம் பூசைநடந்து வருகுதையா சுவாமி.

சாளுவராஜன் சொல் விருத்தம்.

சந்தோஷமாச்சதிந்த சாளுவநகரந்தன்னில்
குந்தகங்கள்ளராலே குரோதங்கள்வராவொண்ணது
பந்தமாய்நகரங்காக்கும் பாளயக்காரர்தம்மை
இந்தநற்சபையிற்றானே யிக்ஷணமழைத்துவாரீர்.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே நீங்கள் சொல்ல யென்மனது சந்தோஷமாச்சுது ஆகிலும் நம்முடைய பட்டணம் காவல்காக்கும் பாளையக்காரரை அதிசீக்கிரமத்துக்கு அழைத்துவாருங்கள் மந்திரிமார்களே.

பாளையக்காரர் வருகிற தரு.

காவல்காக்கும் பாளையக்காரர்
கடிதுவந்தாரே.

மேவுசிரசில் வண்டிப்பாகை
விளங்கும்சல்லடம் கச்சையிருக்கி, (காவல்)

தாடிமீசைமுறிக்கி விழித்து
தாண்டிதாண்டியெகிறி குதித்து. (காவல்)

கையிற்கேடயங் கத்திதாங்கி
கட்டும்பாசக்கயறை தூக்கி, (காவல்

அரசனழைத்த சேதியென்ன
அவசரகாலங்கள்போக சொன்னோம். (காவல்)

காவற்காரர் சொல்-வசனம்.

சரணம் சரணம் ராஜாதி ராஜனே யெங்களை அழைப்பித்த காரியம் இன்னதென்று தெரியப்படுத்த வேண்டுமையா சுவாமி.

சாளுவராஜன் சொல் விருத்தம்.

பட்டணங்காக்கப்பட்ட பாளையக்காரரேகேள்
துஷ்டர்கள்ளராலே சோரமும்வரப்போகாது
கட்டுகம்மாளிக்குள்ளே கனத்தபொக்கிஷத்திலென்று
கஷ்டமில்லாமல்காத்து நமக்குமேலுப்பிப்பீரே.

வசனம்.

கேளுங்கள் பாளையக்காரர்களே பட்டணமுழுமையும் சிலதுபேர்களுக்கவேணும் நம்முடைய பொக்கிஷ களஞ்சியத்தை சிலதுபேர்களுக்கு ஒப்பிக்கவேணும் பாளையக்காரர்களே,

பாளையக்காரர்கள்சொல் வசனம்,

அப்படியே மகாராஜாக்கினைதயாயிருந்து ஒப்பிக்கின்றோமையா சுவாமி,

பொதுவசனம்.

இப்படியாக மகாராஜாக்கினைதயுடனே நாள்தோறும் பாளையக்காரர்கள் காத்துவருகிற நாளில் ஒருநாள் திருடர்களெல்லாம் கும்பலாக சேர்ந்து இந்த சாருவராஜன் பொக்கிஷக்களஞ்சியத்தில் களவுசெய்யத்தக்கதாக ஆலோசத்திக்கொண்டு கள்ளர்வருகிற விதங்காண்க.

கள்ளர்வருகிற தரு.

கள்ளர்நாங்களே பாவஜாதி
கள்ளர்நாங்களே,

கள்ளர்நாங்களெங்கள் காலங்கள்தோருமே
கொள்ளையடித்துப்போய் கொண்டுஜீவனம்செய்யும். கள்ள

சொக்குபொடிதூவி நிக்ஷாமல்யாரையும்
நாலுவகைத்தகவர் கொள்ளைசெய்து

பக்குவமாக படுத்துறைந்து
பார்த்தவர்போல்பொருள் தூக்கிக்கொண்டேகிடும். கள்ள

கோட்டையகலப்பள்ளக் தாண்டியரண்மனை
குதித்துமெயிரிப்போய் நுழைவோம்
சொக்கரித்தெதிர்த்து வந்திடும்பேர்களை
குலைகலங்கிட தள்ளிதுணிப்போம் கள்ள

நல்லோர்பெரியோர்க்கு உதவாமற்றேடும்பொருள்
நாஞ்சம்பாதித்தனென் றென்னும்பொய்த்துர்த்தர்கள்
வல்லமைப்பேசி அழிகுவர்வாயிலில்
ஆப்பையடித்தப்பின் வாய்ப்பையபிடிக்கினர் கள்ள

கள்ளர்சொல் விருத்தம்.

தெரியாதபுத்தியாலே சிறுகுடிகளிற்புகுந்து
பெருந்தனமகப்படாமற் பேதையாய்போனோமிப்போ
திர்த்தனன்சாருவராஜன் மிண்டினிபுகுந்தால்நன்மை
வருத்திடும்வருமைநோயும் வதமாகப்போகுந்தானே.

வசனம்.

கேளுங்கள் சினேகித அன்பர்களே யிதுவரையில் நமக்குவிவேகமில்லாமல் சிறுகுடிகைகளிற் றிருடினபடியால் பேதையாய்போனோம் இப்போது இந்த சாருவமகாராஜன் அரண்மனை பொக்கிஷகளஞ்சியத்தில் நுழைந்தால்நம்மைவருத்துகிற தரித்திரநோய் விலகியோடிப்போகும் அன்பர்களே ஆம்! ஆம்! அப்படியேபோகலாம்வாருங்கள் நேசர்களே.

பொது விருத்தம்.

அரண்மனைகள்ளரேகி அகப்படும்திரவியத்தை
தாரணமாய்மூட்டைகட்டி தூக்கிக்கொண்டோடும்போது
விரவியேகாவற்காரர்கும் வேகமாய்துரத்தக்கண்டு
மருவியதிருடர்ப்போ மாண்டவர்வனத்திற்சென்றார்.

வசனம்.

இப்படியாக சாருவராஜன் பொக்கிஷக்களஞ்சியத்தில் கள்ளர் புகுந்து திரவியங்களை மூட்டை கட்டி எடுத்துக்கொண்டுபோக அப்போது பாளையக்காரருக்கு அரவப்பட்டு கள்ளரென்றறிந்து அவர்கள் பின்தொடர்ந்து துரத்திக்கொண்டுபோக திருடனானவர்கள் மாண்ட

வரிஷ் நிஷ்டைசெய்கிற வனத்துக்குள் புகுந்தபோது பாளையக்காரர்சொல்லுகிற விதங்காண்க.

பாளையக்காரர் சொல் தரு.

ஆரடாதிருடர்களே — வேகமாக ஓடுகிறீர்
அந்தவனம்புகுந்தாலும் — விடுவமோ
பாரடாவுங்களை — நாங்களேபிடித்துக்கட்டி
பதைத்திட — வெட்டியெருகுவோம்
அட்டியென்னயினிநீங்க — ளகப்பட்டபேர்களை
கட்டியரசன்முன்னே — கொண்டுபோய்விடுவோம் ஆரடா

திருடர்க்குருபீடமோ — அடா
நிஷ்டைசெய்யுங்கள்ள — ஞாயம்வேரடா
கேட்டமொழிக்கெதிர்சொல்லவாட்டமென்னடா அடா
கெருவமிஞ்சியே — மழுந்தைகொண்டாய்
கள்ளன்பெண்டு — விதவையென்னாரா
சொல்மொழி — தப்புமோடா
கசடனேயின் — கட்டுகட்டி
போடுவே — மடா. ஆர

பொது கொச்சகம்.

கள்ளருடன்மாண்டவரை கயருகட்டுகட்டி
கள்ள அடித்துதைத்து சாளுவன்முன்கொண்டுவர
வள்ளலிவரையிங்கே வரக்கொணர்ந்தகாரணமென்
உள்ளபடிவரலாறு ஒளியாமற்சொல்வீரே.

பாளையக்காரர் சொல் கொச்சகம்.

திருடர்க்குருபீடமிவன் ஜெபத்திலிருப்பவன்போல்
கருவியிவனேவலினுற் கள்ளர்மிகுந்துரையா
தருமகுணபூபதியே சரியாகச்சொல்லுகிறோம்
மருவிகள்ளரோடுமிவன் வாய்திறவான்கொண்டுவந்தோம்.

சாளுவராஜன் விருத்தம்.

எந்தவூர்யெந்ததேசம் யிவ்வனம்வந்திரையா
உந்தனுக்கிந்தகள்ளர் உதவியுமுண்டோசொல்வீர்
பந்தமாய்கூறாவிட்டால் பாரிகள்ளருக்குமிஞ்சும்
நிந்தைதண்டனையும்நீதி முறைப்படிசெய்குவேனே.

வசனம்.

கேளும் சிவவேடதாரியே நீரெந்ததேசம் இந்தவனத்திலிருந்தகாரணமென்ன உள்ளபடி உன்வரலாறென்ன இந்தகள்ளருதவி உனக்கேதாகிலுமுண்டோயிது சேதிவாய்திறந்து நீசொல்லாவிட்டால் இந்தகள்ளருக்குசெய்கிற தெண்டனைவிட மிகுந்ததண்டனை விதிப்பேன் சிவவேடனே.

சாளுவராஜன்சொல்விருத்தம்.

கள்ளருக்கிந்தஜமான்மெய்தான் கபடனும்பேசவில்லை
கொள்ளையும்கொலையுமெத்த கொடுமையுமிவனுரைச்சி
தள்ளிக்கொண்டுயிர்க்கழுவில் சாவில்லாவதையைச்செய்வீர்
உள்ளதாயிதர்க்குச்சிக்ஷட்டை உலகத்தின்நீதிதானே.

வசனம்.

கேளுங்கள் காவற்காரர்க்கும் பாளையக்காரர்களே இவன் கள்ளருக்கெல்லாம் குருவென்று சொன்னீர்களே அதற்கு சந்தேகமில்லை அதேதெனென்றால் வாய்திறவாமல் மௌனமாயிருக்குறான் இவனால்தான் குலைகளவுகள் கர்மம் ரொம்பவும் மேலிட்டது ஆகையாலிவனை பிடித்துக்கொண்டுபோய் உயர்க்கழுவில்போட்டு வதையச்செய்வதே நீதிமுறையாவகயால் கழுவிலேத்திவிடுங்கள் பாளையக்காரர்களே.

பொது விருத்தம்.

மன்னனிடசொற்படிக் காவலர்களந்த
மாண்டவ்யனையுயிர்கழுவிற் போட்டாரப்போ
கல்லுதலைமனத்திருத்தி நிலைவிடாமற்
காலமதாசழித்தவந்தார் சிலநாள்சென்று
நன்னுதலாள்நளாயினிக் குத்துவேலை
நாடியொருதெருச்செல்வன நகரில்வாழும்
தன்னிகரிலாசித்ரரேகையென்னும்
தாசியுமேதெருவீதி தனிர்ச்சென்றாளே.

வசனம்.

இப்படியாக அரசன் உத்தரவின்படியே காவற்காரர் மாண்டவ்யரை உயிர்க்கழுவிற் போட்டபோது அந்த முனிநாதனும் பரமபக்

கடவுள்மேல் சித்தம்வைத்து நிஷ்டையிலே தவறாமற் சிலநாள் காலஞ்சென்று வரும்போது முன்னர்ப்பட்டணத்தில் வாசஞ்செய்திருக்கும் மௌகல்யமகாரிஷி தேவியாகிய நளாயினி அம்மனுக்குத் தம் வேலைக்கு ஒர்வீட்டில்போய் பணிவிடை செய்திருக்க அப்போது அந்தப்பட்டணத்திலிருக்கும் சித்திரரேகையென்னும் தாசியானவள் வேடிக்கார்த்தமாய் அவ்வீதியில் வருகிறவிதங்காண்க.

சித்திரரேகை வருகிற தரு.

தெருவைசித்ரரேகை — அரிவில்பிருத்தவஞ்சி
தேவதாசியும்வந்தாள் — வெகுவேடிக்கையாக
தேவதாசியும்வந்தாள். — தெருவை

பருவமிவ்ளமுருக் — செதிரொருவிரைச்சொல்ல
பாவைமதியுமீடோ — காவைநிகரோவெல்ல - சுருள்
பைங்கிளியேயிவள் — கொங்கைகள்மேரென
திங்கள்முகத்தொளி — யெங்குமேயிவளொலி — தெரு

ரத்னப்பணிமெய்யில் — வெகுசித்ரமுடன்பூண்டு
நாகரிகபட்டாடை — தோகையுடுத்திக்கொண்டு - சுருள்
ரஞ்சிதமிஞ்சியே — கொஞ்சிதருபிஷிவள்
பஞ்சவர்ணக்கிளி — வஞ்சகஸ்திரிகள் — தெரு

இழையொன்றிணைப்பகன்ற — வழகானயிடைநட்பம்
குழையொன்றிணைச்சிறந்த — பழகாதபலபுஷ்பம் - சுருள்
கோங்குமல்லிகையும் — பாங்குடன்யானையும்
தாங்கியேதாதியர் — வாங்கியேமுடித்திட. — தெரு

அன்னநடைநடந்து — சின்னயிடைதுவண்டு
கன்னல்வில்மதனையே — நன்னயமனத்துள்கொண்டு - சுருள்
கல்வியில்வல்லவள் — செல்வியல்புள்ளயள்
மெல்லியளிவளெனும் — நல்லவளாமெனும். — தெரு

பொதுவிருத்தம்.

சித்திரரேகைதேவ தாசிவந்தகமேசென்றுள்
வித்தகமுனியும்வேறு விகல்பஞ்செய்யெண்ணங்கொண்டு
நற்றியகளாயிகர்ப்பு நர்மின்னமரியவேனும்
வெத்தனம்அவள்மேல்மோகம் மீறிமெய்குலைந்திருந்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் தாசியானவள் வேடிக்கார்த்தமாய் வீதிவலம் வந்து பிரகுதனதுவீட்டிற்குப்போனாள் அதுகண்டு மௌகல்ய முனியானவர்தனது தேவியாகிய நளாயினியம்மன் கர்ப்புநிலை அரியவேண்டிவேறு விகல்பஞ்செய்யயோசித்து அந்ததாசியின் மோகங்கொண்டபாவனையாக முகமும்தேகமும் தளர்ந்துவாடி இருக்கநளாயினியும் நெல்குத்தின கூலியைவாங்கிக்கொண்டுவந்து முனிவரைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

நாளாயினி சொல் விருத்தம்.

யென்னிடபிராணநாதா இதுவென்னபுதுமையின்று
உன்னிடமுகமும்சோர்ந்து உரிகிமெய்தளர்நதுற்றீர்.

மௌகல்யரிஷி சொல் விருத்தம்.

அன்னமேயென்னசெய்வேன் அதிசயமொன்றுகண்டேன்
முன்கொம்புதேனைக்கண்ட முடவனுக்கிச்சைபோச்சே.

வசனம்.

சேளுமையாயெனது பிராணநாயகா உம்முடைய முகமும்சோர்ந்து தேகமும் மெலிந்திருப்பது யென்னபுதுமையாயிருக்கின்றது சுவாமி சேளும்பெண்ணே முடவன் கொம்புத்தேனுக்கிச்சித்ததுபோல் அதிசயத்தைக்கண்டு இப்படியானேனடி பெண்ணே.

நளாயினி சொல் விருத்தம்.

இச்சித்தவஸ்த்தாரமும் இன்னதென்றரியச்சொன்னால்
கச்சணிமுலையாள்கண்டு சொல்படிமெய்வருத்திவரேன்
மிட்சயம்வராவிட்டால் நிமலநாநிருக்துமென்ன
மெச்சுமிப்பூமிபாரம் விருதாவாம்பெண்ணின்பிரேதம்.

வசனம்.

கேளுமையாசுவாமி பிராணனாதா தாங்கள் இச்சைகொண்ட பொருள் இன்னதென்று சொல்வீரானால் அதை தேன் நிரேகத்தை அடிமைபடுத்தியாவது தருவித்துக்கொடுக்குரேன் அப்படிகொடாமற்போனால் நானிந்தபூமியிலிருப்பது நடமாடும்பிரேதமல்லவோ பிராணநாயகா.

மௌகல்யரிஷி சொல் தரு.

இன்பக்கவலைமனதில் சொன்டேன்
பென்னமாய்மோ யிதர்க்கிப்படி நான்செப்பிடுவேன்
எப்படிநான் செப்பிடவும்
யொப்பிட லாமோ யின்பக்

முடவன்கொம்பு தேனைக்கண்டு
முன்பின் முழித்தாப்போல்
நான்மோகமானேன் வெகுதாபமதாய்
மோகமானேன் தாபமாய்
ஆதலா லே யின்பக்

கண்டேன்மேண்டை வீதிதனிலொருகன்னியாளொருத்தி
காதல்கொண்டேன் அவள்மேல் மோகமதாய்
காதல்கொண்டேன் மோகமதாய்-சோபமிகலாகி. யின்ப

காமவெள்ளமதிகமாகி மோகமாகினேன்
கன்னியவளயின்னிமிஷம் யென்னைநிரேகானேன். யின்ப

ஆசைகொண்டேன்பாசமதாய் தாசியின்மேலே
நேசமதாய்மிகசோப வாகிவெகுதாபமதுரைவாகவே யின்ப

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

கொணர்ந்துநீவருவையாகில் கோரிக்கைசொல்குரேன்கேள்
அணிந்திடவொருவர்தம்மை அருவையாள்தேவதாசி
இணையல்லஅரம்பைதானோ கீழ்தெருவீதிதன்னில்
மணர்ந்துமேவாசமுற்ற மங்கைமேல்மோகமானேன்.

வசனம்.

கேளும் பெண்ணே! எனது கோரிக்கையானது கொண்டுவந்து கொடுப்பது மெய்யானால் சொல்லுகிறேன்கேள் இந்தப் பட்டணத்தில் கீழ்புரத்தெருவில் ஒரு வாலிபதாசி இருக்கிறாள் அவளோ அரம்பையோ ஊர்வசியோ அவளழகைக்கண்டு மையல் தலைக்கேரிகாமவிகாரம்கொண்டு க்ஷேமகிஷ்டைமறந்து அன்னபானத்தின்மேல் விருப்பமில்லாமல் மன்மத பாணத்தினால் பிராணவாதை படுகிறேனடி பெண்ணே.

நளாயினிசொல் தரு.

என்னசெய்வேன்யீசா அவன்மனம்
எப்படியோ றவ்ரியேன்
உன்செயலோ யல்லாமல்
வேறெனக்குத் துணையுண்டோ என்செ

எந்தன்பிராணநேருக்கு ஒப்பென்றால்
என்னயான் சொல்வேனையோ என்செ
வர்மம் அரியாமல் அவர்க்கு
வார்த்தைபா டானேனையோ என்செ

பஞ்சபூதமுமொத்து புத்திரவுக்குதானும்
பணிவிடைசெய்தது மெய்யானால் என்செ
வஞ்சகம்பேசாமல் தேவதாசியைமது
ஒத்தாடப் பவனோ என்செ

இவ்விதயோசனைகள் நளாயினியென்னி
தாசிவீதி போகிறாளோ என்செ

பொது விருத்தம்.

தாசிதன்மனையின்வீதி தான்சென்றுவிடியாமுன்னம்
நேசமாய்பவனைக்காண நெரியல்லவென்றுதன்மை
பாசமாயவளேகாணப் பணிவிடைசெய்தசொன்று
வாசமாய்மனதிலெண்ணி அவள்தெருகத்திசெய்வாள்.

வசனம்.

இப்படியாக நளாயினிஅம்மன் தாசிமனைவீதியிற்போய் நின்று இப்போது நாமே அவளைக்காண்பது சரியல்ல அவளை காணும்படி.

க்கு இவள் தலைவாசலை சுத்திசெய்து மெழுகி மொக்கிட்டு வைத்து போவோமாகில் பின்னல் நம்மை அவளே காண்பாள் அப்போது நம்மிட கோரிக்கையை சொல்லலாமென்று நினைத்துசுத்திபடுத்துகிற விதங்காண்க.

நளாயினிசொல் தரு.

பத்தாவின்யெண்ணப்படி	உத்தமிதாசியுமொவ்வ
பணிவிடையான்	செய்வேனே
கர்த்தனார்செயல்படி	யித்தெருசுத்திசெய்ய
கைத்துடப்பங்கொண்டு	பெருக்கி
சற்றுங்குற்றமென்றுமல்	சாணம்தெளித்துபின்னும்
சரியாகதிண்ணைமெழுகி	மொக்கு
பத்தியுடனேயிட்டு	பருதிவிடியமுன்னம்
பாவைநாநிருப்பிடம்	சேர்வேன்

பொது விருத்தம்.

இந்தபடிபிரிதிதினம் செய்துவந்தாள்
இதைதாசிக்கரிக்கையிட்டாள் யேவல்காரி
பந்தமுடன்செய்பவளார் நம்மாலென்னப்
பலனுருமென்பவளைப் பதிவிருந்து

0-1892, MKY, N07
76677

சந்தடிசெய்யாதவளைப் பிடித்துவந்தால்
தானினைத்தகோரிக்கை யரியலாகும்
அந்தபடிபதுங்கிருக்க ஒருநாள்தன்னில்
அம்மன்நளாயினியவள்கையி லகப்பட்டாளே.

வசனம்.

இப்படியாக நளாயினியம்மன் பிரிதிதினம் தாசிதெருவீதி பெருக்கி தலைவாசப்படி திண்ணைபுமெழுகி மொக்கிட்டு வைத்துப்போட்டு தனது இருப்பிடம் போய்விடுகிறது அப்படியிருக்க தாசிக்கு பணிவிடைக் காரிகள் இதைப்பார்த்து தன் யெஜமானிக்கிதெரிவிக்க அதைப்பார்த்து தாசியும் அடி தாதிகளே இந்த வேலைசெய்பவளார் நம்மாலாகவேண்டியகோரிக்கையென்ன தெரியவில்லை நீங்கள்பதுங்கிருந்து பிடித்துவாருங்கோளென்று உத்திரவுசெய்ய அப்படியே நல்லதென்று தாங்கள்பதுங்கிருக்கிற தருணத்தில் நளாயினி அம்மன் பணிவிடை செய்துவரும்போது பிடித்துக்கொண்டுபோய்தாசிமுன் விட அவளும் கண்டுசொல்லுகிற விதங்காண்க.

தாசிசொல் விருத்தம்.

திருமாதேநீயாரோ அறியேனம்மா
தேவடியாளென துதெரு சுத்திசெய்ய
மருமாயமிதுபுதமை யென்னுமக்கு
வருகலமுமின்னதென்று வாய்புகன்றால்
அருமையதாயிருந்தாலு மந்தவஸ்து
அடியவள்நான் கொடுத்துதருவேனிப்போ
குறைவருமென்றேனிணையா யரிவில்மிக்க
கொம்பனையேமனக்கிலேசம் கொள்ளவேண்டாம்.

வசனம்.

கேளுமம்மா தாயே நீயோ மகா லட்சுமியைப்போலிருக்கிறாய் உனக்கு என்னாலாகவேண்டிய காரியமென்ன எனது தெருவை சுத்திசெய்ய விதியமென்ன அந்தசங்கதிசொன்னால் அது அருமையான வஸ்துவாயிருக்கபோதிலும் வருவித்துதருகிறேனம்மா தாயே.

நளாயினி சொல் விருத்தம்.

உண்மையதாய்சொல்லுகிறேன் யென்தன்பித்தா
உத்தமர்தான்ஞானனிலை தவரிடாதோர்.
கன்புடனேயென்னைகலி யாணஞ்செய்த
நாள்முதலாய்ப்பெருவியாதி அவரைப்பற்றி

புன்னினைமுஞ்சீழுமிக நாறியெத்த
பெலவில்லைக் கூடையின்தான் யெடுப்பதாண்டு
வன்மையுடனுனைக்கண்டு ஆசைக்கொண்டு
விலையுயிரார்காமத்தால் மாதெஸ்செய்வேன்.

வசனம்.

கேளுமம்மா விலைமாதே உன்னுடனே உண்மையைச் சொல்லுகிறேன் என்னுடைய பத்தா மகாதபசியோனி அவரென்னை விவாகம் செய்த நாள்முதல் பெருவியாதியடைந்து அவர்தேக மெல்லாம் புண்ணுஞ் சீழும் வடிகிறது நாத்தமுடையதாய் நடக்கமாட்டார் அவரை சுத்தி செய்து நல்லசந்தனம் பரிமளாதிகளால் வாசனை அணிவித்து கூடையில் அவரை எடுத்துக்கொண்டு போகிறது அவருன்னைக் கண்டு அன்று முதல் காமவிகாரம் கொண்டு மதிமயங்கி சேமமிழந்திட்டைமாக்கு அன்னபானாதிகளருந்தாமல் உயிர்வாதைப்படுகிறார் ஆகையினாலே நீ அவரைச்சேர்வதாக உத்திரவு செய்தால் யெனது மங்கிலியபிச்சை கொடுத்ததுபோல் அம்மணி.

தாசி சொல் தரு.

அன்னமேயிதுவென்ன யென்னைசோதிக்கவந்த
ஆச்சரியம்யென்றலாகும் முன்னமே.

நளாயினி சொல் தரு.

மின்னலைநிகர்த்தமாதே அன்னமேபொய்யல்லவம்மா
மோகமுன்மேல்வைத்தாரிப்போ கன்னலே.

தாசி சொல் தரு.

திருவையொப்பானதேவி தேனேயுன்கணவனோடான்
சேரத்தபமென்செய்தேனோ அருமையே.

நளாயினி சொல் தரு.

பருவமிலாமமாதே பத்தாவின்யென்னைப்படி
பாவிப்பதாமுந்தன் பெருமையே.

தாசி சொல் தரு.

சொன்னசொல்பிசகேன் சோராமியானல்ல
நேராகவேயம்மிவாரு மென்னையே.

நளாயினி சொல் தரு.

பன்னிரண்சொல்வதென்றுபாவைநீகோபம்கொள்ளாதே
பத்தாமனம்போலிருப்பாய் வெண்ணிலே.

தாசி சொல் தரு.

எம்மெத்தபுருஷருக் கெப்படியிச்சைப்படி
இஷ்டமாய்நடப்பேன் பந்தமாய்.

நளாயினி சொல் தரு.

எந்தன்கோரிக்கையைநீ யேத்துக்கொண்டாகையினல்
இருபாதம்பணிந்திதேன் வந்தனம்.

தாசி சொல் தரு.

அப்படிசெய்யத்தகுமோ அடியாளுன்பாதத்தில்
ஆயிரம்சரணம்அவரை அழைத்துவாரும்.

நளாயினி சொல் விருத்தம்.

விலைமாதின்உத்திரவைப் பெத்தேயிந்த
மெல்லிநளாயினிமுனிபால் விரைவிற்சென்று
நிலையுளவென்பிருணேசா சித்ரரேகை
நிஷியமாய்புமையழைத்து வரவேசொன்னள்
சிலைநுதலாள்மொழிவதனைக் கேட்டேயந்தச்
சிற்பாரும்மூர்ச்சைதெளிந் தெழுந்தேயங்க
ஆலவுளதோயெனையெடுத்து அவள்பாற்செல்ல
சீக்கிரம்போவெனவவரைச் சிரமேற்கொண்டாள்.

வசனம்.

இப்படியாக தாசியின் உத்திரவை பெற்றுக்கொண்டு நளாயினி அம்மன் தன்புருஷரிடத்துக்குவந்து கேளுமையா சுவாமி பிராணநாயகரே அந்த தாசியான சித்ரரேகை தங்களை யழைத்துக்கொண்டுவரச் சொன்னாளென்று சொன்னமாத்திரத்தில் அந்தமுனிநாதரும் மூர்ச்சைதெளிந்து அடிபெண்ணே அவளிருப்பிடம் தொலைதூரமோ ஆகிலும் அதிசீக்கிரமத்திற்கு யென்னை அவ்விடத்தில் யெடுத்துக்கொண்டுபோவாய் பெண்ணேயென்று சொன்னமாத்திரத்தில் அந்த அம்மனும் முனிநாதரை கூடையிலுட்காரவைத்து தன்சிரசின்பேரில் யெடுத்துக்கொண்டு போக அப்போ முனிவர் சொல்லுமிட விருத்தமாவது.

தாசி சித்திரசேனைவீட்டிற்கு நளாயினி
மௌகல்லியமகாரிஷியை எடுத்துச்செல்லுதல்.

மௌகல்ய ரிஷி சொல் தரு.

பெண்ணே தருசாகநடவடி தாசிவீட்டினில்
யென்னைக்கொண்டுபோய் விடடி
கண்ணேயயளழகை காணக்கண்கூச்சுதே
யென்னமாய்பொறுப்பேன் சீக்கிரம்போகவேணும் - சுருள்
இத்தெருவல்லடி அத்தெருசெல்லடி
சுத்தராயென்னடி உத்தமிவிடடி. (பெண்)

நளாயினி சொல் தரு.

ஓட்டமுநடையுமாகவே யெம்பிரானேசா
நாட்டமுடனே யேகுவேன்
காட்டியதாசிவீட்டுக் கப்புறந்தானையா
பாட்டையிலேயிருந்த பெருவீதிதான்மெய்யா - சுருள்
பத்தியுடனுந்தமே சித்தமேகர்த்தரே
வித்தரேமிசனமும் சற்றெனும்கொள்ளாதீர். (ஓட்ட)

மௌகல்ய ரிஷி சொல் தரு.

பாதகிதூரமாகுதே அவளைக்கண்ணால்
பார்க்கவும் நேரமாகுதே
பேதகமென்மனம் வார்த்தையிலுழலுரேன்
பெண்ணவளைக்காணமல் யெண்ணமுருசுழலுகுரேன் - சுருள்
பேரணிமங்கையர் வாரணிகொங்கைகள்
மார்புமழிந்திட சீர்பொலிவாக்கிட. (மாதகி)

நளாயினி சொல் தரு.

அவசரமாய்போரேனையனே யிதோவிட்ட
அக்கதபாரும் மெய்யனே
சிவனைப்பணியுந்தவ தாசியின்வீடிது
சிற்பாகண்டுதெளி அற்புதம்நன்றாகவீ - சுருள்
சிறுமையேயினியும்க் கருமையோவதாசும்மா
வறுமைநீர்கொள்ளாமல் பெருமைநீர்தள்ளாமல். (அவச)

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

தையலேதாசிவீட்டில் தானென்னைகொணர்ந்துசேர்த்தாய்
நைவிலாதென்னையெடுத்து நடையினில்விட்டுயேகி
கையினால்கதவைசாத்திக் கப்புறந்தாப்பாள்போட்டு
அய்யமில்லாமல்வீதி அத்திண்ணையிருந்திடாயே.

வசனம்.

கேளும்பெண்ணே! நளாயினி என்னை தாசிவீட்டுக்கு கொண்டு வந்து சேர்த்தபடியினாலே யெனக்கு மகாசந்தோஷமாச்சுது நீநம்மை அசையாமலேயெடுத்து இந்த நடையில்விட்டு கதவைசாத்தி பின்தாப்பாள்போட்டுக்கொண்டு அத்தெருத்திண்ணையிலிருந்தால் நானழைக்கும்போது வந்து என்னை யெடுத்துக்கொள்ளடி பெண்ணே: அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

பொது விருத்தம்.

இந்தபடி மனைவியர்க்கு எல்லாமிடு
மௌகல்யர் ரூபமாற்றி
பந்தமிகுமதன்வடிவம் எடுத்துக்கொண்டு
பாசமுடன்தாசிமுன்னே நின்றபோது

விந்தையுள்ளதேவர்களோ வெம்பொருந்து
விருகடையவர்பாதம் துதித்துப்போற்றி
அந்தமுளநளாயினி அம்மன் அனுப்பவந்த
அவர்தானோமெனக்கரிய வியம்புவீரே.

வசனம்.

இப்படியாக மௌகல்யர் தன்மனையாளுக்கு திட்டம் செய்தபின் பெருவியாதி ரூபத்தைமாற்றி மகாசுந்தர மதனவடிவங்கொண்டதா சிமுன்னின்றபோது இதென்ன தேவர்கள் ரூபம்போலிருக்கிறதென்று சாஷ்டாங்க தெண்டனிட்டெழுந்து இன்றுகால[illegible] அந்த நளாயினி அம்மன் அழைத்து வருகிறேனென்று சொல்லிப்போனீர்களே அவர்தானோ அல்லவோ சொல்லவேணுமென்[illegible] கேட்க அப்போது மௌத்கல்யரும் ஆம்மெய்தானென்று சொல்ல அப்போது தாசியான சித்திரரேகை சொல்லுகிற விருத்தாந்தம்.

தாசிசொல் விருத்தம்.

சந்திரமனைவிகொஞ்சம் தோகைபொய்புகலுவாளோ
குஷ்டகம்பெருவியாதிகுஷ்டம்நீ ரென்றுசொன்னீர்.

மௌகல்ய ரிஷி சொல்லுதல்.

விந்தையாய்மனையாட்குத்தான் வியாதியாயிருப்போனும்
அந்தமாய்பிறர்குத்தோற்றம் அரிவைநீவெளியிடாதே.

வசனம்.

கேளுமையா மன்மதரே தங்கள்தேவி கொஞ்சம்பொய்பேசுகிற வழக்கமோ உம்மை பெருவியாதியுடைய குஷ்டங்கொண்டவரென்று சொன்னார்களேயா அந்த அம்மனி ஆம்பெண்ணே அவள்கண்ணுக்கு வியாதியுடையவன்போ லிருப்பது மற்றவர் கண்களுக்கு இப்போதிருக்கிற சுபாவத்தைப் போலிருப்பது இதை நீயாருக்கும்வெளிவிடாதேபெண்ணே. அப்படியே நல்லதையா சுவாமி?

தாசிசொல் கொச்சகம்.

பெண்களெல்லாம் மெய்யனுயிர்களெல்லாம் போழுதையாக்குமதன்
தங்கவுருதனைப்போலே [illegible]ரணிதனில்வந்தமன்று
சங்கர்குலமெய்வாழும்நீ திருபுபத்துக்கென்தனமும்
அங்கட்பு[illegible]ளகமுர வணக்குமுத்தந்தாராயோ.



மௌகல்யரிஷி சொல் கொச்சகம்.

கன்னியிளமயிலே கற்பகமே அர்ப்புதமே
மின்னலொளியே வீரகமிடுமானினமே
அன்னநடையே அழகுபசுங்கிளியே
இன்னமிடையாளுனைநான் சேரமனுபிர்தரியேன்

தாசிசொல் கந்தார்த்தம்.

வஞ்சகமென்மேல் வைத்திருந்தன்னை
வழுகினைப்பழித்த பெண்ணரசே
தஞ்சமென்றோர்க்கு தயவுவைத்தாளும்
தருமகுணநிதி சொரூபா
மிஞ்சியேனுந்து பாணம்பட்டேகி
மெய்யெலாந் துதிரவெயர்வாகி
பஞ்சையானுந்தன் பதமலர்தொழுதேன்
பலவிதலீலைகள் செய்ய.

தாசி சொல் தரு.

பஞ்சணையில்வாருமையனே பெண்ணைத்தழுவி
கொஞ்சிமுத்தந்தாரு மெய்யனே
அஞ்சிஅஞ்சிஎன்னேரம் நெஞ்சுபுண்ணுவதோயோ
வஞ்சியெந்தன்மேலுனக்கு நெஞ்சிரக்கமேயிலையோ பஞ்

மௌகல்யரிஷி சொல் கந்தார்த்தம்.

ரதியெனும்பாவை நடனசிங்காரி
நலம்பெரு மயிலிலங்காரி
அதிவிதஅழகி உனையலால்வேறு
பாவையொப்பிடையிலையான்

அதிசெயமெனாமீ தொழும்புசெய்துந்தன்
அடில்கமோத்திநிலவு மல்லால்
சதிசெய்யமேருமு தாழும்பேரத்
தளர்விடா தெந்தனைக்கூட

மௌகல்ய ரிஷி சொல் தரு.

தையலேவாடி — கட்டிமுத்தம்
மையல் — ஈந்தாடி
அய்யமில்லாமலே — சைபோகமாகவே
மெய்யதாகவிலே — செய்யலாமிந்நவரும். (தைய)

மௌகல்ய ரிஷி சொல் விருத்தம்.

அன்னமேயுன்னைச்சேர்ந்தேன் ஆசைகள்மிகவுந்தீர்த்தேன்
என்னிடயிருப்பிடத்துக் கிரைவினாலேசுவேணும்.

தாசி சொல்லுதல்.

நன்னயப்பிராணநாதா நாள்தப்பாதிவ்விடம்வந்து
கன்னியென்சோபமாத்திக் கர்த்தரேயேகுவீரே.

வசனம்.

கேளும் பெண்ணே நாஉன்னை புணர்ந்து எனதுவிரகதாபந்தீர்த்தேன் இப்போதிந்த இரவிற்றானே நானிருப்பிடம் போகவேணும் பெண்ணே கேளுமையா எனது பிராணவல்லபா யின்றுமுதற்கொண்டெப்பிதினம் இராத்திரியில் இவ்விடம் வந்து எனக்குபோககமளித்து போகவேண்டுமென்று கேழ்க்க நல்லது அப்படியே வருகிறேன் பெண்ணே என்று மௌகல்யர் சொல்லிவிட்டு தன்னாரண்மனைவருகிற விதங்காண்க.

பொது விருத்தம்.

நல்லதுபெண்ணேஎன்று நடையினில்முனியும்வந்து
வல்லதோர்மதன்ரூபத்தை மாத்திமுன்னுருவமாகி
மெல்லியேயெடுத்தேகென்ன விமலியுமவரையேந்தி
சொல்லியதீர்மேர்க்கொண்டு தோஷையுங்கடந்தாளன்றே.

வசனம்.

இப்படியாக மௌகல்ய ரிஷியும் முன்னடையில் வந்து மன்மத ரூபத்தை மாத்தி முன்ருஷ்ட்ட வடிவாகினது தேவியையழைத்து

எடுத்துக்கொள்ளென்று சொல்ல அந்த அம்மனும் அவரைமுன்போல்கூடையில் வைத்து தனது சிரசின்பேரில் எடுத்துக்கொண்டு தான் இருப்பிடம் சேர்ந்தாள்.



பொது விருத்தம்.

இந்தபடிதினமவரை யெடுத்துக்கொண்டு
ஏகிவருமோரிரவிற் கந்தகம்பி
வந்தவழிதெரியாமல் ஏதிங்கிப்போனள்
மாண்டவியுமுயர்க்கழுவில் வதையும்பாதம்
முக்கியந்தகூடைபட வதைமேலாகி
மூர்ச்சைதெளிந்தவருருத்திபார்க்கும்போது
அந்தமுளபெண்பாலென் றறிந்துகோபம்
ஆக்ரமித்துசாபமது புகல்வதானர்.

வசனம்.

இப்படியாக நளாயினிஅம்மன் மௌகல்யரை பிரதிதினம் தாசிவீட்டுக்கு யெடுத்துக்கொண்டு போகும்போது ஒருநாள் அமாவாசை கருக்கல் ஆகாயத்தில் நக்ஷத்திரம் தெரியாமல் மூடிக்கொள்ள அப்போது வழிதெரியாமல் வேறுவழியாக வரும்போது அவ்விடத்தில் உயிர்கழுவில் தொங்குகிற மாண்டவ்யரிஷி பாதத்தில் இந்தகூடைபட்டமாத்திரத்தில் அவருக்குமிகவும் வாதையடைந்தோர்மூர்ச்சையும்

உ-ருத்திப்பார்த்து பெண்பாவென்னிக்கு கோபம் பிரவேசித்துசாப கொடுக்கிற விதங்காண்க.

மாண்டவரிஷிசொல் விருத்தம்.

பெண்பாவாய்ப்புருஷனன்பால் யெனக்குநீதான்
பெரியதாண்பழுமிர்வதையும் தந்தாயாதல்
தின்பானயிருளகன்று விடிந்தாலுந்தன்
திருமங்கிலியம்அறுந்து விதவையாவாய்.

நளாயினிசொல் விருத்தம்.

நன்பானபருதியிது தர்மந்தானோ
நானென்னசெய்வதினி யினிமேல்நீயும்
விண்பாருமண்பாரு வெளிப்படாமல்
வெடியாமலிருப்பதுவே விருதமென்றாள்.

வசனம்.

கேளும்பெண்பாலே நீபுருஷ னிஷ்டத்துக்காக எனக்கு இப்படிக்கொத்த பிராணவாதைகொடுத்தாயாதலால் பொழுதுவிடிந்தால் உனது திருமங்கிலியம் அறுக்கக்கடவதென்று மாண்டவர் சபிக்க அப்போது நளாயினி அம்மன் சூரியபகவானை தலத்தியம்செய்து பூலோகமும் வானுலோகமும் பொழுதுவிடியாம லிருக்கக்கடவது வென்றுசொல்ல அப்போது ஒருவாரமளவும்பொழுதுவிடியாமலிருந்துவிட்டது மறுபடி தேவர்கள் மாண்டவரிடத்துக்கு வருகிற விதங் காண்க.



தேவர்கள் வருகிற தரு.

தேவதேவயிக்கிரர்வந்தார் மாண்டவரிடத்தில்
தேவதேவயிக்கிரர்வந்தார்.

தேவதேவயிந்திரர்வந்தார் ஜெகத்தில்பெண்பால்வார்த்தையாலே
மேவும்பூசைஜெபங்களோமம் யிருந்தபடங்கள்யாதுமில்லாமலே
பரிதிவாரம்வெளிப்படாமற் பலருங்கலங்கிகெடுங்கிமெருண்டு
சூரியியிந்தசேதியசிய கூடிகும்பலாகிவ்விடம் (தேவ)

முப்பத்துமூக்கோடி தேவருமோடி.
முனிவர்நார்பத்தெண்ணு யிரவருமோடி.
அற்புதமிதனை அரியலோனுமென்று
அலைகடல்போல்சத்தம் மங்குமேனிட்டு
வானுலோகப்பெரியதிர வையகத்தோர்பலருப்பிதர
ஆனைவாகனமீதில்வாசவன் அமைத்தமாகமவேசேரி (தேவ)

தேவர்கள் சொல் விருத்தம்.

மாண்டவமுனியேயுந்தன் மலர்ப்பதம்போற்றி அய்யா
நீண்டவானுலகம்பூமி ஓமங்கள்பூசையில்லை
வேண்டியவருத்தமுற்றோ மிராவண்டிப்பகலில்லாமல்
ஆண்டவாயிங்குவந்தோம் வகைதீர்க்கவருள்செய்வாயே.

வசனம்.

கேளுமையா மாண்டவமுனியே உம்முடைய பாதாரவிந்தஞ் சரணம் சரணமையா இந்த பூலோகம், வானுலோகமும், பொழுதுவிடியாமல் யாகாதிபூசை அர்க்கியபாத்திய முதலானவுமில்லாமல் நாங்களெல்லாம் தத்தளித்துவாடி தங்களிடத்திற்குவந்தோம் ஆகையால் அந்த இடுக்கத்தை தீர்த்து ரக்ஷிக்கவேணுமையா முனிவரே.

மாண்டவரிஷி சொல் விருத்தம்.

தேவரேயுயிர்க்கழுவில் செத்திடும்பிணம்போல்தொங்கும்
பாவிநானென்னசெய்வேன் பற்பணிதனைக்கேளுங்கள்.

தேவர்கள் சொல்கலி.

காரியந்தன்னையம்மா காரியமென்றலாகும்
மேவுமுனிவர்போதாவெடியநீ அருள்செய்வாயே.

மாண்டவரிஷி சொல் வசனம்.

கேளுங்கள் தேவர்களே இந்த உயிர்க்கழுவில் செத்தபிணம்போல் தொங்குகிறவன் நானென்னசெய்வேன் அந்த அம்மாவினை கேளுங்கோளென்று சொல்ல அப்போதேவர்கள் சொல்கிறார்கள் அம்மா தாயே லோகந்தத்தளிக்குது உன்னுலிறால் பொழுதுவிடியும்படிசொல்லவேணுமென்று கேழ்க்க அப்போ நளாயினி அம்மன் சொல்லுகிறவிதங் காண்க.

நளாயினி சொல் விருத்தம்.

உங்களுக்குதவியான உறுதியைப்பேசலுற்றீர்
பெண்களுக்கியல்போபுருஷன் பிரிந்துமங்கல்யமிழக்க
நங்கைமேல்கோபம்வேண்டாம் நன்முனியிடத்தில்சென்று
மங்கையிற்கிடும்சாபத்தை மாற்றிடவருள்செய்வீரே.

வசனம்.

கேளுங்கள் தேவர்களே உங்கள் உபயோகத்திற்காக எனது பத்தாவை இழந்து மங்கில்யம் அறுக்கலாகுமோ ஆகையால் என்மீதில்கோபம் வையாமல் அந்த முனிவரிடத்திற்குப்போய் என்சாபத்தைமாத்தி பிரிதிவரங்கொடுக்க செய்வீர்களாகில் உங்கள்மனதின்படிசெய்குரேனையா சுவாமி.

தேவர்கள் சொல் தரு.

அய்யரேமாண்டமுனியே உய்யவந்தர்ம்மந்தாரே
அருள்செய்யவேண்டுமிப்போ மெய்யரே. (அய்)

மாண்டவரிஷி சொல் தரு.

பேசினதுயிர்வாதை பிரேதம்போல்நானிருக்கும்
பேயனையென்செய்யச்சொன்னீர் தேவர்களே.

நளாயினி சொல் தரு.

மோசஞ்சானுவதிவரை யீசனென்றெண்ணமல்செய்தால்
மூடனையழைத்துவதை தீர்க்கவேணும்.

தேவர்கள் சொல் தரு.

வாசமுள்ளவரனே யீசனென்றிவரையெண்ணமல்
மதியேன்பிரண்டாய்பேயா சொல்லடா.

சாநுவராஜன்சொல் தரு.

தேவரேயுங்கள்பாதத்தில் தீர்க்கவேதெண்டமையா
நிராப்புதிரான்கொண்டேன் னென்னசெய்வேன்

தேவர்கள் சொல் தரு.

ஆறுல்கமுவைவிட்டு நீதானேயிரக்கின்றல்
அதன்பின்தெரியுமிவர் சொப்பினே

பொது விருத்தம்.

பொக்கிவிட தேவர்சொல் சாருவதாமேபி
இரும்பாக்கும்அரத்தினு லாவிரதன்னே
கருமகனுறைக்கலைத யவர்க்கில்லாமல்
கழுமரத்தைவிட்டவரை பிரக்கிவிட்டார்
கருமலைராகளாயினியின் வருகில்மாண்டு
நன்முனிக்கதோதரூடன் வந்தவின்று
திருமகள்போல்மங்கிலியம் சுபங்கள்பெற்று
தீர்க்கவயதுடன்வாழ்வாய் ஜெகத்திலம்மா.

வசனம்.

இப்படியாக சாருவாரதுவும் சொல்லின அரங்கொண்டு வரச் செய்து இரவி மாண்டவரிஷிக்கு ஒருவருத்தமுமில்லாமல் அவனைக் கழுவைவிட்டிருக்க அப்போது அந்தமுனிவர் சந்தோஷித்துநளாயினி அம்மனிடம்வந்து பொழுதுவிடிந்தால் சுமங்கிலியாய் தீர்க்காயுசுட ன்வாழக்கடவதென்று பிரிதில்மளிக்க அப்போது நளாயினி அம் மன் சொல்லுகிறவிதங்காண்க.

நளாயினிசொல் விருத்தம்.

வரந்தரும்முனிபாதத்தில் மங்கையும்தெண்டனிட்டு
சிரமதிற்கையைவைத்து தேவரே சரணமிப்போ
அரிவையாள்செய்தகுற்றம் மத்திடவேணுமையா
பருதியின்கடுல்நீங்கி பகற்போதுவிடிந்திடாயே.

வ ச ன ம்.

இப்படியாக நளாயினியம்மன் மாண்டவரிஷிபாதத்தில் சரணஞ் செய்து மற்றதேவர்களுக்கெல்லாம் தன்னிருகையை கூப்பி சரணஞ் செய்து சகலத்திராளும் அடியவள்செய்தகுற்றம் பொறுக்கவேணும் சூரியபகவானே நீ இருள் நீக்கி பொழுதுவிடியக்கடவதென்று சொ ன்னமாத்திரத்தில் சூரியபகவான் கிழக்குதிசையில் உதயமாகிவெளியா கிறார் அதன்பின்பு நடக்கிறவிதங்காண்க.

தேவர்கள்சொல் விருத்தம்.

சூரியஉதயமாகத் தேவர்கள்சந்தோஷித்து
காரிகைஉனைப்போலிந்த கடல்சூழுலகிலில்லை
மேருபோற்கீர்த்தியோங்கி பிகுசுபாசுபங்கள்பெற்று
சிருடன்வாழியென்று தேவர்வானுலகம்சென்றார்.

வசனம்.

இப்படியாக சூரியபகவான் உதயமானபின்பு தேவர்கள் சந் தோஷமடைந்து இந்த பூலோகத்தில் ஸ்திரீஜாதிகளில் உன்னைப்போல் பதிவிரதையில்லை ஆகையால் மகாசிறப்பு பொருந்திய சுபா சுபங்கள்பெ ற்று வாழக்கடவதென்று சொல்லிதேவர்கள் வானுலகமாகிய தேவ லோகம் சேர்ந்தார் அதன் பின்பு நடக்கிற விதங்காண்க.

பொது விருத்தம்.

வரமதுதந்தமாண்டவமுனியு மனதினில்துயரமேயடைந்து
மருவியின்னுளாயபலகலையுணர்ந்து மவுனமாக்குருதிலேதெரிந்து
இருமையாமூடர்க்கதைத்திடும்கிஷ்டமை செய்ததுயேதெனவரிய
கருவியேயமனுமியமபுரமசெல்ல காலனும்கொலுவதாய்வந்தான்.

வசனம்.

இப்படியாக நளாயினி அம்மனுக்கு மாண்டவமகாமுனிவர் வர ங்கொடுத்தபின்பு மனத்துயரமடைந்து நாமோசிவக்கியானியா இருந் தும் நமக்கு இப்படி உயிர்க்கழுவாகிய துன்பம் வருகச்செய்ததை அறிவோமென்று யெமபுரத்திற்கு மாண்டவர் போகுற தருணத்தில் அப்போது எமதர்ம்மராஜன் மந்திரிபிரதானிகளுடனே கொலுவுக் குவருகிற விதங்காண்க.

எமதர்ம்மராஜன் வருகிற தரு.

தென்திசைக்கதிபனும் நீரனெமதர்ம்மராஜன்
மந்திரிமார்புடைசூழவே அதிவிதமாய்
வந்துசபை கொலுவாகிறார்
சித்ராபுத்ரகுணிகரும் சூரவீரராஜாவரும்
பத்தியுடன்தொழுதேத்தவே யெமதர்ம்மராஜன்
வெற்றியுடன் வந்தமேவினான்
ஆதிமுனிரிஷியோரும் அஷ்டதிக்கேம்பாலகருக்
வேதகுணைசோஷ்டமோதவே எமதர்ம்மராஜன்
நீதியுடன்வந்து தோன்றினார்
தேவதேவரிந்திரரும் சிங்கமெனவிங்கிலையரும்
ஆவலுடன்போற்றிசெய்யவே எமதர்ம்மராஜன்
மேவிசபை கொலுவாகிறார்.

எமதர்ம்மராஜன் சொல் விருத்தம்.

மந்திரிமாரேயிந்த மாநகரெமபுரத்தில்
விந்தையாமாகசெய்ய மெனிகாமகொலுவில்வந்தேனும்

சுந்தராய்வாரமேலோகம் தேவர்கள்பூலோகத்தார்
பந்தமாய்ஷேமந்தானோ பகருவீர்பகருவீரே.

வசனம்.

மாறுங்கள் மந்திரிமார்களே நாமானால் இந்த எமபுரத்தில் பரிபாலனஞ்செய்ய கொலுவீற்றிருக்கிறோம் வானுலோகத்தேவர்களும் பூலோகமனிதர்களும் ஷேமந்தானோ சேனாதிபதிகளே.

மந்திரிகள் சொல் விருத்தம்.

தருமமேமாமியோகத்தயானமா யாகசெய்யும்
நிர்மலமில்லேயிக்குறை சேனாபதியே
மர்மமாய்பூலோகத்தில் மனிதர்கள்தேவரெல்லாம்
சர்மமில்லாமனுந்தன் கடாட்சத்தால்ஷேமந்தானே.

வ-ம். கேளுமையா எமதர்மராஜா உம்முடையகடாட்சத்தினாலே தேவர்களும் மனிதர்களும் ஷேமந்தானையா சுவாமி.

எமன்சொல்-விருத்தம்.

அக்கினிபுகைக்கண்ணா அனல்விழிநெருப்புக்கண்ணா
திக்கெனுமுகத்தாய்பூர நீபத்ரசிலமேகர்
மிக்ககோரனிவாயா மேவியசிங்கப்பல்லா
பக்கமிருந்தேநீநற் பாபபுண்ணியங்கள்கேளீர்.

வசனம்.

அடா அக்கினிக்கண்ணா, புகைக்கண்ணா, அனல்கண்ணா, அடா ஆனைமுகத்தாய், அடாசிங்கப்பல்லா, நீங்கள் யாவரும் அருகாமையில் வந்து நின்றுக்கொண்டு மானிடர் செய்கிற பாபங்களுக்கு விதித்திருக்கிற நீதியைக்கேளுங்களப்பா தூதர்களே. அப்படியே நல்லதையா சுவாமி.

தூதர்விசாரணை விருத்தம்.

சித்திபுத்திரரே மானிடர்க்காக
செவ்வருத்திடும்கெதிபுகல்வாய்

சித்ரபுத்திரன் சொல்லல்.

கர்த்தனாமைந்த கணக்கினைபார்த்து
கழறுவேனிச்சபைதனிலே

தூதர்கேட்டல்.

அன்னியமாதரைவதைத்துமே பெரசிப்போர்க்
சுகர்கெதிதெரிந்திடக் கூறுவாய்

சித்ரபுத்ரன் சொல்லல்.

வன்னியம்பொருத்து மருகரிடைத்து
காருத்தழுதெரிலேரிருப்பார்.

தூதர்கேட்டல்.

பொய்யுரைத்தசலரர் பொருளினைவாங்கி
பொசிப்பவர்தனக்கே புகல்வாய்

சித்ராபுத்ரன் சொல்லல்.

கையவேதரகில் புழுக்களைவாயால்
நசிந்திடபொசிக்கவே வேணும்

தூதர்கேட்டல்.

மாதர்தன்புருஷை கலிக்கிடாபிறரை
மயக்கியே தழுவுபட்கேது

சித்ராபுத்ரன் சொல்லல்.

காதலனைதிரும்ப கம்பமேகாச்சி
காட்டியேதழுவிடச் செய்வோம்

தூதர்கேட்டல்.

கனவிறுப்பிறரை வதைத்துக்கொன்றகை
கரும்பொருள் பறிப்பவர்க்கேது.

சித்ராபுத்ரன் சொல்லல்.

வனவிடாதுன்பம் கர்த்திடையாழ்ந்து
மவர்தனைகுறி காகவிருக்கும்.



மாண்டவரிஷிசொல் விருத்தம்.

இத்தனைநீதியோடு யமாயோகசெய்யும்
உத்தமாவுன்னைநிந்த உலகினிலறிப்பர்மெய்ராஜன்
மெத்தவென்னைவிதிதானே மெஞ்ஞானதவத்திருந்து
குத்தயாக்கழுவிற்போட்ட கொடுவினைவிதித்ததென்னை.

வசனம்.

கேளும் எமதர்மராஜனே நீமகா நீதிமார்க்கமாய் அரசுசெய்வதற்கு இந்த உலகமெல்லாம் அறிசெய்வார்கள் மெய்ஞான் ஆகிலும் நான் ஞானமெடுத்து எனக்கு கன்னிவிதிதான் விளைந்தன் முதலாக மெஞ்ஞான தவத்திலிருந்த எனக்கு உயிர்க்கழுவு போடவேண்டிய விதியெதினாலே நேரிட்டது அது எனக்கு தெரியும்படி சொல்லவேணும் எமதர்மராஜனே.

எமதர்மராஜன் சொல் விருத்தம்.

அப்பனேமாண்டோதநீ அந்தவுத்தமர்க்குவேதா
மெய்பருவமைதன்னில் மேனியோதும்பிதன்னை
கையினால்பிடித்துமுன்னாள் கடினமாய்கழுவிற்போட்ட
வெய்யதோர்வினையாலிந்தவிதத்துவந்ததாமே.

வசனம்.

கேளும் மாண்டவ்யமுனியே நீரோ இளங்கைப்பருவத்தில் தும்பியைப்பிடித்து முன்னால் குத்திகழுவிற்போட்ட பாபத்தினால் உமக்கு இப்படிக்கொத்த உயிர்க்கழுவு நேரிட்டது முனிநாதா.

மாண்டவரிஷி சொல் விருத்தம்.

எமனேபிரேமைக்குள் விளங்கையாம்பருவந்தன்னில்
தாமவர்செய்ததீங்குதன்னாலே வேறுமல்லால்
நேமமென்றறந்தனுக்கு நீயிஷ்டமைவிதித்தாயாதல்
சேமகர்குலத்தில்போய்நீ தமையனாவிதுரனாவாய்.

வசனம்.

கேளும் எமதர்மராஜனே பிரேமை பதினாறு வயதுக்குள்பட்ட செய்த குற்றங்களுக்கு இஷ்டமை விதிக்கப்போகாது அப்படியிருக்க நீயெனக்கு இஷ்டமைவிதித்தபடியினாலே நீ பூலோகத்தில் சத்திரவம்சத்தில் பிறந்து அரசாளாமை இல்லாமலிருக்கக்கடவது போ.

பொது விருத்தம்.

இந்தபடிசாபமதை யெமனுக்கேய்த்து
மெய்ஞானமாண்டவரும் தபமேசெய்ய

வித்தையுள்ளமௌகல்யர் பெண்ணேயென்று
மெய்மையதாய்த்தேவர் துதித்திடவிகர்ப்பாம்
பத்தமாயுன்மீதில் தயவுவந்து
பலவிதத்திலெவ்விதமாய்ப் புணரவேனும்
அந்தபடிவரங்கேளென் றுரைக்கவப்போ
அம்மைநளாயினி யவளுமுரைப்பதானாள்.

வசனம்.

இப்படியே எமனுக்குசாபங்கொடுத்து தபசுக்குபோய்விட்டார் மறுபடி மௌகல்யர் பெண்ணே இன்றுதான் தேவர்களறிய நீகற்புடையவளென்று தெரிந்து உன்மீதில்மிகவும் தயவுவந்தது ஆகையால் எந்தரூபமாயும் எந்தவிதமாயும் உன்னைப்புணரவேணுமோ அந்தவரங்கேளென்றுசொல்ல அப்போ நளாயினியம்மன் சொல்லுகிறவிதங் காண்க.

நளாயினிசொல் கொச்சகம்.

முத்திவினையருக்கும் முத்திவித்தேபிரசன்னா
எத்தனைசீர்கூடுதற்கு யென்னவரமேதென்றால்
நூத்துபுலன்பொரியுமைந்துவிதரூபமதால்
சித்ததகளித்தென்னைசேர சீர்வரந்தந்தாள்வீரே.

பொது விருத்தம்.

இத்தவிதநளாயினும் வரந்தாவென்ன
இன்னமொருபிறப்பிலுந்தன் மனம்போலென்று
பத்தமுடன்மௌகல்யர் வரமுந்தந்து
பட்சமுடன்தன்னுருவம் வேறேமாத்தி
வித்தைநளாயினியுருவ மாத்திவைத்து
விளங்குயிந்திரசேனை யென்றுபெயருண்டாக்கி
அந்தனுடன்புணர்ந்திடவே வருவாயென்ன
இருவருமேகாமசுகத் திருக்கலுற்றார்.

வசனம்.

இப்படியாக நளாயினியம்மன் வரங்கேட்க்க மௌகல்யர் பெண்ணே நளாயினி இந்தப்பிறப்பில் கடவாது இன்னம்பின் பிறப்பில் உன் மனதின்படியே நடக்குமென்று வரங்கொடுத்து பின்பு தன்னுருவத்தை மாற்றிநளாயினியம்மன் உருவத்தைமாத்தி இந்திரசேனையென்று பெயருண்டாக்கி வாரும் பெண்ணே இந்திரசேனை என்றழைத்து இருவரும் காமசுகத்திலிருக்கிற விதங்காண்க.

மௌத்கல்யரிஷிசொல் தரு.

வாராய்பெண்ணே மைப்பல்முத்தம்
தாராய்கண்ணே.
வாராய்பெண்ணேயிந்த வையகந்தன்னிலே
ஆரும்செய்யாத அவதிகளையெய்தேன். (வாரா)

இந்திரசேனைசொல் தரு.

வந்தேகாண்முனியே பிதழ்முத்தம்
தந்தேனினியே தர
வந்தேன்யினிநீரும் மெய்தனை போகிக்க
சிந்தைதயவுகொண்டு சந்தேகமினியின்றி (வந்தே)

மௌத்கல்ய ரிஷி சொல் தரு.

சதிதேவிபெண்ணே உடையாள
பதிதாவிபெண்ணே
சதிசெய்யேனினியுன்னை பதியிர்த்தமடமின்னே
கெதிவேறுமில்லையாது கிதியாருமில்லையாது. (வாரா)

இந்திரசேனை சொல் தரு.

மதன்காமமாராய் உழையிபெத்தன்
விசனமுந்திரா
அதிலிடலோபமும் பிதனிடலோபமும்
விதினிடாபமும் அதனிடதாபமும். (வந்தே)

மௌத்கல்யரிஷிசொல் விருத்தம்.

இவ்விதமாய்காமசுகம் நெடுநாளாக
இன்பமனுபவித்திருவ ரிருந்தபின்பு
செவ்விதழாய்பெண்சடிலன் தேருதற்கு
செய்தவத்துக்குறைமுடிக்கச் செல்லவேணும்
யெவ்விதமோபிரானேசா தவத்தாலென்ன
பிதைவிடலோமதன்காம சுகத்தைவிடோ
சொல்லைகனி நூரல்ரசமுண்டார்கோடி
கொடிதானபங்கைக்கலோ கூறுவீரே.

வ-ம். இப்படியாகஇருவரும் நெடுநாளாகஇன்பமனுபவித்தவர்களின் பின்பு மௌத்கல்யர் சொல்லுகிறார்கேளும் பெண்ணே எனது ஜென்ம சாபல்லியம் உண்டாக்குவதாக நான்செய்த தவக்குறைமுடிக்க வனத்திற்குபோகவேணுமென்று சொன்னமாத்திரத்தில் நளாயினியும் இந்தபோகத்தையும்விடமனமில்லாசொல்லுகிறளங்கு அப்பொழுதவர் சொல்லுகிறவிதங்காண்க.

மௌத்கல்யர்சொல் விருத்தம்.

ஆதிநாள்போகமுனைக் களித்தேனது
மாதவினோர் தவங்களிதர்க் கிடோவென்றும்
சாமியினியிங்கொருக்கால் கில்லேனென்று
காணகமேசென்றவரும் தவத்தில்நின்றார்
நேமியிந்திரசேனைமனம்நொந்துவேராய்
நிமலனையேநோக்கிமனம் வேண்டிக்கொள்வாள்
சுவாமியெந்தன்விழிமுன்னே வாருமென்ன
சங்கரரும்விடையேறி வருகின்றாரே.

வ-ம். ஆமாம் பெண்ணே நானுனக்குபோகசுகங்கொடுத்தபடியால் தபசிதர்க்கு இடமென்றுசொல்லவந்தாய் ஆசையிருந்தாலினி உன்னுடன் சேரவேனென்று வனத்திற்குப்போய் தபசியிலிருந்து விட்டார் அதின் பின்பு இந்திரசேனையும் வருத்தமுற்று பரமசிவனைநோக்கிதபஞ்செய்ய அதற்காக சங்கரர்வருகிற விதங்காண்க.

பரமசிவன்வருகிற தரு.

சாம்பசிவசங்கரர்வந்தார் விடைமேலேறி
சாம்பசிவசங்கரர்வந்தார்.
சாம்பசிவசங்கரர்வந்தார் தரணியோரூமெச்ச
பாம்புபுலித்தோலுரித்து மகிமைதரித்தயீசர் சாம்ப
வெள்ளைவிடைமேலேறி விரித்தசெஞ்சடையா
துள்ளுவெண்ணீரணிந்து சேஷகந்தரேசர் சாம்ப
முக்கண்ணுடையநெற்றி தக்கனைவென்றமூர்த்தி
பக்கமிற்சிவகணங்கள் மிக்கவேசூழ்ந்திடபோற்றி சாம்ப
காலகண்டதிருநேத்ரர் சூலகபாலபாத்ரர்
ஞாலமதிஜதிப்புண்ட ஆலமுண்டநீலகண்டர் சாம்ப

இந்திரசேனைசொல் விருத்தம்.

திரிபுரமெரித்தாய்போற்றி சிவசிவாபோற்றிபோற்றி
கரிதனையுரித்தாய்போற்றி காலனையுதைத்தாய்போற்றி
விரிசடையானேபோற்றி விமலனேபதிபதிநீ
பதிபதிபதியந்தஅ பரகெதிக்கருள்செய்வீரே.

வ-ம். செனுமையாபராபரக்கடவுளே உமதுபாதாரவிந்தஞ்சரணஞ் சரணமையாசுவாமி அடியாளுக்குபதி-பதி-பதி-பதி-பதி-என்றும்புருஷனையளித்து முடிவில்சொர்க்கமோக்ஷமளிக்கவேணுமையாசுவாமி.

பரமசிவன்சொல் விருத்தம்.

அன்னமேதந்தோம்தந்தோம் ஆயிழைதந்தோம்தந்தோம்
இன்னமும்தந்தோமம்மா இப்பிறப்பாகிலும்
மன்னியிதுநித்தநூறு மனிதனைமணமுடித்து
சொன்னசொற்றவறாய்வாழ்ந்து சொர்க்கம்பின்னேநுகர்வீர்.

வ-ம். சேனும்மணி நீ பதிக்கேதி-பதிக்கேதி-பதிக்கேதி-பதிக்கேதி பதிக்கேதி-யென்று நம்மை நீர்ந்து இவ்கேட்டபடியினலேநாமும் தந்தோம்-தந்தோம்-தந்தோம்-தந்தோம்-தந்தோமென்று ஐந்து விரந் சொன்னபடியினலே நம்முடைய வாக்குபிரகாரம் நீயும் இப்பிரப்பு அக்கினியில்பிறந்து நீயன் புருஷனைக் கேட்டுக்கொண்ட இஷ்டம்போலும் அவர்வாக்கின்படி உனது நாயகனுடைய பஞ்சபூத அம்சமும் ஐந்துபுருஷர்களாக பிறப்பார்கள் நீ அவர்களுக்குத் திருமணஞ்சூட்டி வெகுகாலஞ்சீர்த்தியுடன் வாழ்ந்து பிறகுமுடிவில் சொர்க்கமோக்ஷமடையக்கடவாய் நாம்போய் வருகிறோமம்மணி. (சூ)

பொது வசனம்.

இப்படியாக பரமசிவன் இந்திரசேனைக்கு வரங்கொடுத்துகைலாயகிரிக்கு எழுந்தருளினார் அதன் பின்பு இந்திரசேனை பிரப்புமுடிவாகி ஜெனமாத்தி பாஞ்சாலராஜன் உடையவர் உகேமயாசன் யென்று இரண்டிருஷிமாரைக்கொண்டு நடத்துகூர் அவர்ப்பாகம் அந்த அரசன் மனைவிக்குக்கொடுக்க யெத்தனிக்கவே விரைவில் அந்த அம்மணி புஷ்பவதியாகினாள் அதின் பிறகு அந்த அவர்ப்பாகத்தை ஓமாக்கினியில்விட அப்போது இந்த அம்மன் அமிசம் வந்து உதித்து யாகசேனையென்னும் பெண்ணுருவாய் அவதரித்தது என்று தெரிந்த புண்ணிய முன்னோர்கள் சொல்லுவார்கள் என்றவாறு.

மங்களம் ரு.

மங்களமே ஜெய மங்களம்
மங்களமே ஜெய மங்களம்.

மங்களவிநாயகர்க்கு மாதுதேவிவல்லபைக்கும்
எந்தன்வள்ளியர்க்கும் யீசன்சிவகாமிக்கும். (மங்க)
நாரணன்லக்ஷிமிக்கும் நான்முகன்வாணிக்கும்
மாரன்ரதிதேவிக்கும் வாசவிந்திராணிக்கும்
மங்கைநளாயினிக்கும் மௌகல்யாதருக்கும்
யெங்குமிரிஷிமுனிவர்க்கும் மேத்தபத்தினியருக்கும். (மங்க)
பாண்டவரைவருக்கும் பத்தினிதுரோபதைக்கும்
கீண்டகடன்ருமூலயில் திவமையுள்ளவர்க்கும். (மங்க)

வாழி விருத்தம்

அந்தணரரசர்வாழி அவனியில் வைசியர்வாழி
விந்தையில்பூதிவாழி விண்ணுமோரெலரும் வாழி
பந்தமாம்நளாயினிகாதை படிப்பவர் கேட்பவர் வாழி
சிந்தைக்கைர்ப்பில்லைந்த சீர்பெரும்பென்பால்வாழி.

நளாயினி மாலையீடு என்னும்
நளாயினிநாடகம் முற்றிற்று.

விளம்பரம்.

—:*:—

இதனால் சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் சென்னை-ஆனா கரையாங்குட்டைவீதி 20-வது நெ. வீட்டில் அடியில் கண்ட புஸ்தகங்களும் இன்னும் அனேகவிதமான தமிழ், தெலுங்கு, புஸ்தகங்களும் சகல வியாதிகளுக்கு அவுஷதங்களும் பெற்றுக்கொள்ளலாம். அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் பெரிய கேட்லாக் ஒன்று இனாமாய் அனுப்பப்படும்.

கார்க்கேயர்நாடி	0	12	0
கந்தர்நாடி	0	8	0
புஜண்டர்நாடி	0	5	0
சோதிட அரிச்சுவடி (1-பாகம்)	0	3	0
ஷை (2-பாகம்)	0	3	0
வைத்திய அரிச்சுவடி (1-பாகம்)	0	3	0
ஷை (2-பாகம்)	0	3	0
விநோதமஞ்சரி	0	2	0
சிற்பசாஸ்திர அரிச்சுவடி	0	4	0
நளாயினிநாடகம்	0	5	0
குறவஞ்சிநாடகம்	0	5	0
மாடுபிடிசண்டை	0	8	0
அரவான்களபலி	0	5	0
வாலிமோட்சநாடகம்	0	5	0
சுந்தரமஹாதேவி நாடகம்	0	5	0
கிருஷ்ணன் ஜலவிலாசம்	0	5	0
விநாயகர்கல்யாணம்	0	5	0
பார்வதிக்குபரமசிவன் உபதேசித்த [illegible]நாடி	1	0	0
நன்னெறி அரிச்சந்திரவிலாசம் உயர்ந்தபதிப்பு இச்சுவடிதம் 100-படங்களுடன்	2	0	0
முகூர்த்தஞானம் சக்கரத்துடன்	0	4	0
ஆஞ்சநேயர்கீர்த்தனை ராகதாளமெட்டுகளுடன்	0	2	0
எல்லாரும் பார்க்கத் தகுந்த தேவராஜாக்கள் கிரிமினல்கேஸ்கட்டு	1	8	0
கிராமமுனிசீப்சட்டம் புதியபதிப்பு	1	0	0
பிரபஞ்ச உற்பத்தி	2	0	0
சண்டாளர் சகவாசம்	0	8	0
ஆகடவிகடம்சாரி	0	4	0

விலாசம்:—ஆனா-முனிசாமிமுதலியார், கரையாங்குட்டைவீதி,
நெ. 20, ஆனா போஸ்டு மதராஸ்.